# "சும்மா சுகமாக இரு"!

## இதழ் - II





பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# “சும்மா சுகமாக இரு”!

## இதழ் - II

# பொருளடக்கம்

1. பொது விதி-------------------------------------------------------------------௧௩

எல்லாம் நீ!



"அதை" இல்லை எனச் சொல்லவும் முடியாது!
உண்டு எனச் சொல்லவும் முடியாது!
கூடாது என்றும், இயலாது என்றும்,
ஏன் சொல்கிறார்கள் என்றால் ?????
அது தான் காணாது! தனக்கு அன்னியமில்லாதது!

அதை ஸ்ரீமஹான்கள், விளக்கும் போது எப்படி ஆகிறதென்றால்
வார்த்தை தரமில்லான்! மனிதருக்கு புன்சொல்லான்!
"பேச்சறா" (பேச முடியாத! பேச இயலாத!
பேச்சு இல்லாத! அதை இன்னதென விளக்க முடியாத!)
வர்ணம் சற்றும் "பேசாப்" பிரம்மமடி! என்கிறார்கள்!

இப்படிப்பட்ட ஒன்று, என்ன செய்கிறது என்றால், சாதனையாளனை
மட்டும், தனிக்கவைக்கும்! பின் அவன் அனுபவத்திலே,
நவிக்கவைக்கும்! பின் அவன் நிர்க்கதியின், அனுபவத்
திலே, ஒன்றுமே செய்ய இயலாத் தன்மையை கொடுக்கும்!
இத்தன்மையிலே அவனுக்கு இருப்போ நான்!
என்றும் இயக்கமோ எனது முழுமையாக
இல்லாமல், அழிந்து போனதன்மையிலே?

எங்குமாய்! எல்லாமாய்!!
ஏகமாய்!!! தாம் தானாய் நிறைந்து கொண்டு,
அது அதுவாகவே இருக்கும்! ஆகவே தான், அதை எவரும்
கண்டாரும் கிடையாது என்றும், விண்டாரும் (சொன்னவர்)
கண்டதில்லை! சொல்ல முடியாது! சொல்ல இயலாது!
அனுபவ ஸ்ரீ ஞானிகள், சொல்லக் கேள்வியுற்றோம்! என்றும்



உ

(97)

ஆகவே "அதை" (சொல்லவோ! கொள்ளவோ! தள்ளவோ! ஏற்கவோ!) முடியாது! முடியாது!

ஆனால்?

# "அதுவே நாம்" "நாமே அது"!

சும்மா சுகமாக இருந்தால், அது நாமாவோம்! நாமே அதுவாவோம்! "அநுபவானந்தம்" இது ஆகும்.

"சந்தம்" என்றால் எந்தக் காலமும், அதாவது முக்காலமும், அதாவது எந்த விநாடியும், வாக்காலும், வரியாலும் விளக்க முடியாததான, இமைப் பொழுதாயினும், "யாம்" ஆத்மாவேயன்றி அன்னியமாய் இலவே இல்லை! எம்மையே யாம், "ஸம்ஸாரி" எனச் சொன்னது, எம் மனமடமையும்! ஜகவாஸ தோஷ பழக்கமுமாகும்! யாம் ஸம்ஸாரி என்ற குடும்பியும் அல்ல! யாம் ஆணும் அல்ல! யாம் பெண்ணும் அல்ல! மேலே கூறிய, சொந்த பந்த, உறவு இவைகள் யாரும் அல்ல. எம்முடையதும் அல்ல! பரசொரூபமாகிய, பிரம்மானந்த சமுத்திரத்தின், ஓர் "உப்புப் பதுமையே யாம்"! ஆனந்த சமுத்திரமாகிய யாம், சற்று விளையாடும் நிமித்தம், மாயாவினால், ஓர் தோற்றம் உண்டாக்கிக் கொண்டு, மாயா மனதினால், சற்று விளையாடினோம். அவ் விளையாட்டு போதும் என நிறைவு பெற்றோம்! இப்போது, எமக்கு அன்னியம் எதுவுமில்லாத ஆனந்த சமுத்திரமாக யாம் யாமாகவே இருக்கிறோம் எனச் சுகமாக சும்மா இரு! தேவே.

(மாயாவும் இல்லை! அம்மாயாவின் மனமும் இல்லை!)

உ





(1) துவைத விருத்தி என்பது, மனம் படைத்த
மனித இனத்தை மட்டும்; குற்றம் குறை,
விருப்பு வெறுப்பு; பேத திருஷ்டி, இவைகளுடன்
கூடி, முழுக்கவன சக்தியுடன் பிறரைப் பார்த்த
வண்ணம், அவர்கள் கர்மாவிலேயே,
முழுக்கவனம் செலுத்தி, அவர்களுக்கு, நன்மை செய்வோம்
என்ற நல் எண்ணமாக தோற்றம் தம்மையும் அவரையும்,
**தோஷ குணங்களுக்கு** ஆளாக்கிக்
கொண்டு, சொந்த பந்த பாச உணர்ச்சிகளுக்கு அடிமையாகி,
ஜனன மரண சடயத்தில் (பள்ளத்தில்) விழுவதுவே,
தூல விருத்தியாகும்!

(2) சாட்சி விருத்தி:— என்பது இறை (ஸ்ரீபகவான்) சொரூப
மாக, இருந்து கொண்டு, மனம் படைத்த மனித இனத்தை
மட்டும் குற்றம் குறை விருப்பு வெறுப்பு, பேத திருஷ்டி இல்லா
மலும், தண்டிப்பு கண்டிப்பு இல்லாமலும்; **ஸத்வ**
குணம் என்ற கருணையால், அறிவுடன் கூடி, அவரவர்
கர்ம தர்மத்தின்படி, இயற்கையின் நியதியில், கொடுக்கல்
வாங்கல் செய்து, அவை **ரகசியம்** என இருந்
தாலும், உயரிய தன்மையையும், உயரிய பிறவியையும், கொடுத்தும்.
அவர்கள் கர்மாவை, பொன் ஊசியென்ற நியதியில் கர்மாவின்
பிணைப்புடன் நடத்தும் ஓர் மாயா நாடகமாகும். இவ்வி
கர்மாவும் தொடருவதில்லை! பிறவி நோயும் நீங்குவதில்லை!
இதுவே சாட்சி விருத்தி ஆகும்!

(3) அகண்ட விருத்தி என்பது:— நாமே ஈஸ்வரர்களாக இருக்கின்
றோம். நாமே ஜீவர்களாகவும், அனைத்து ஜீவ கோடிகளாகவும், மனம் படைத்த
மனித இனமாகவும், அனைத்து ஜடபடாதிகளாகவும், எம்மாயையால்
ஆக்கிக் கொண்டு, எம்மாயையால் தோன்றிய எம்மனதினால், இன்ப
துன்பம் இல்லாமல் **ஆனந்தமாக** விளையாடுகிறோம்!

உ



எம் விளையாட்டு, எப்படி அமைந்தது என்றால்?
ஜடகடபடாதிகளாகவும் அதில் மனித இனத்தை மட்டும் தவிர்த்து நடப்பன, ஊர்வன பறப்பன, நீந்துவன மற்றும் கிருமிகீடகம் ஆகிய அனைத்தையும், இயக்கும்போது, மாயாவின் அம்சமான, "இயற்கையாக" இருந்தோம்!

அடுத்து மனம் படைத்த இந்த மனித இனத்தை மட்டும் இயக்கும்போது, அவரவர் வினையை வைத்து, "மனதை" ஆதாரமாக கொண்டு, மனக்கணக்கின் புண்ணிய பாபத்தை, வைத்து திட்டமிட்ட காரியங்களை, திட்டமிட்டபடி அதிசயமாக ஆனந்தமாக விளையாடினோம்! (ஜீவ விளையாட்டு)

அடுத்து மனித இனத்தை மட்டும், அவரவர் புண்ணிய பாபங்களை ஒதுக்காக கொண்டு அதில் மயக்கம் கலக்கம் இல்லாமல், "அறிவு" சொரூபமாக, இருந்து கொண்டு "சாட்சி" நிலையில், கண்டிப்பு தண்டிப்பு, இல்லாத நிலையில் "ஸ்வயம்பு" என்ற நிலையில், ஆனந்தமாக விளையாடினோம்! (ஈச விளையாட்டு)

அடுத்து "சர்வ சாட்சி" என்ற நிலையில், ஜடகடபடாதிகளையும்! (மனித இனத்தையும் இணைத்து) அனைத்து ஜீவ கோடிகளையும் (நடப்பன, பறப்பன, நீந்துவன, ஊர்வன) எப்பேதமும் இல்லாமல், விருப்பு வெறுப்பும் இல்லாமல், எந் குணங்களும் இல்லாத நிர்க்குணமாய், மாயாவும் மனமும் அற்ற நிலையில் "பேரறிவாக" இருந்து கொண்டு, அங்கு விளையாடவில்லை, அங்கு விளையாடமுடியாது! விளையாடவியலாது! ஆகவே, ஆனந்தமாக ஓர் அனுபவத்தில், சுகமாக இருந்தோம்!"

இப்போது மேலே சொன்ன, மூன்றிலும் "இறைவனும்" என்றும், "அருளாளன்" என்றும் ஆணை



"நிறைவு" கொண்டோம்! இப்போது யாம் யாமாகவே இருக்கிறோம், என்று பூரண நிறைவுடன், அம்மாவேமா சுகமாக இருக்கிறோம்!

அஷ்டாக்ஷரம்! பஞ்சாக்ஷரம்! பீஜாக்ஷரம்! ஷடாக்ஷரம்! மற்றும் 10 கோடி மந்திரங்களும்; சக்திகளையும், கடும் ஆற்றல்களையும், அசகாய சூர சக்திகளையும், திரிகார்த்தாக்களையும் "மிஞ்சிய" (அதிக) சக்திகளையும் கொடுக்கும். அருள், பேர், புகழ், கௌரவம், அந்தஸ்து மற்றும் உலகம், ஜீவர்கள் வியக்கத்தக்க நிலையில், "உலக" ஆசைகளையும், தேவைகளையும், மோஹ போஹமாக அனுபவித்து, திக் விஜயம் செய்யலாம்! ஆனால் "பிறப்பிறப்பை" ஒழித்து நாசம் செய்ய முடியாது. ஆகவே அம்மந்திரங்கள் அனைத்தையும் "தூர" தள்ளு!

முறையோடு உபதேசிக்கும், "குருவையும்" ஒதுக்கி வைத்து விடு! (தள்ளாதே) அதாவது அவர்களை அண்டாதே! அவர்கள் வாக்குக்கு செவிசாய்க்காதே! அவர்கள் அருகிலும் போகாதே! மேலே சொல்லிய நிலையில் நீ நடந்தால் அது "துவேஷம்" ஆகும்! ஆகவே அவர்களை கண்டும் காணாமல் அவர்களை விரோதிக்காமலும்



உ

(98)

நாசிக்காமமும், பசிக்காமமும், பகைக் காமமும், அவர்களும், ஸ்ரீபகவத் சொரூபமே! ஸ்ரீபர சொரூபமே! என்றும்; என்றும் கருத்தில் கொண்டு அவர்களைக் காணும் போது, அவர்கள் "அவைகளே அதுவே", அது "நிவர்த்தியே" என்றும்; (பாடமோ? மந்திரமோ?) ஆனால் அவர்களால் பெறுவதோ "பிரவர்த்தியாகிய காமமே" என நீங்கள் ஒதுங்கிக் கொள்ளுங்கள் (அவர்களை ஒதுக்க வேண்டாம்) ஆனால்?

எல்லாம் அகண்டாகார பர சொரூபமே என்றும்; அதுவே "யாம்" என்றும்; அதுவே "நீ" என்றும்; சந்தேக லவலேச பயமின்றி "ஐயம் திரிபு அற" உபதேசம் செய்யும், ஸத்குருவை மட்டும் ஏற்றுக் கொண்டு, மற்றும் அனைத்து பாடம் படிப்புகளையும் அவை பகர் என உதறிக் கொண்டு "மனையை" அதாவது அவைகள் தான் "மெய்ய ஞானப்பால்" அம்மைக் கருத்துரையை மட்டும் ஏற்றுக்கொண்டு, அதுவே நாம்! நாமே அது என உணர்வு பூர்வமாக சும்மாவே சுகமாக இருக்கலாமே!



உ



ஸ்ரவணம்! மனனம்! நிதித்தியாசம்!
என மூன்று நிலைகளில், ஞான அனுபவம்
பெறுவதை, ஸ்ரீ மஹான்கள் சொல்லுவார்கள்!
ஸ்ரவணம் என்றால், காதால் சிரத்தையுடன்
கேட்பதையும், மனனம் என்றால், அதை அப்படியே
திரும்ப திரும்ப எழுதியும், அப்யாசம், அதாவது அது மனதில்
பதியும் நிலைக்கு, பழக்கத்திற்கு, கொண்டு வருவதும்,
நிதித்தியாசம் என்றால், அப்படி சிரத்தையுடன், அப்யாச,
சிந்தனை, **எண்ணம், சொப்பனமெல்லாம்**
அது வாய்ப்பாடமாக இராமல், "**அனுபவம்**
ஆகுதலும் ஆகும்!"

**1) ஸ்ரவணம்:** பரம்பொருள் ஒன்றே
ஸத்தியம்! அதைப்போல் அதன் அம்ச, உன் உபாசனா மூர்த்தியும்,
ஒன்றே ஸத்தியம்! அந்த உபாசனா மூர்த்தியே, அனைத்து
தேவ தெய்வங்களாகவும் இருக்கிறது! அனைத்து தேவ
தெய்வங்களும், நம் உபாசனா மூர்த்திக்கு அன்னியமாக
இல்லவே இல்லை! அதைப்போலவே, அனைத்து நாமரூப ஜட
பொருள்கள், உறவு, சுற்றம், நட்பு, மற்றும் அனைத்து
இயக்கங்களும், நாமும், நம் இயக்கம் அனைத்தும்,
நம் உபாசனா மூர்த்தியாகிய "**ஸ்ரீ பகவானுடையதே!**" ஆகவே, எல்லாம் அவன் பொருள்!
எல்லாம் அவன் செயல்! அவனின்றி அணுவும் அசையாது!
என்ற, உறுதி வைராக்கியத்தை, திட நம்பிக்கையுடனும்
தோன்றும் பேதங்களையும், குற்றம் குறை உணர்வுகளையும்,



"பொருந்தி" "பொருத்தி" "பொருத்தி" "பொருந்தி" அதி அதி அதி அதி "சிரத்தை" யுடன் செய்தால், இதுகாலபரியந்தம், நான் இருக்கிறேன்! என்றும்; என்றால் முடியும்! என்றும் முடிந்தது! என்றும், என்னுடையது என்ற, மனமடமையாகிய, அகங்கார, அதிகார அபிமானங்கள் பொசுங்கிச், சாம்பலாகிவிடும்!

உ "மனம்":— மேலே சொன்ன நியதியால், அனைத்தும் "அதுவாகிய", "அவன்" பொருளும், செயலும், லக்ஷியமானால், உனக்கு ("நான் ஓர் ஜீவன்" என்ற) பந்த என்னும் நாசமாகி ஒழிந்து போகும்! உன்னுடைய எண்ணம், சொல், செயலால் நான்! என்றும் என்னுடையது மனம் "வருந்தி" "வருத்தி" "வருத்தி" "வருந்தி" அதி அதி அதி அதி "சிரத்தை" யுடன் செய்தால், "சந்தேக" கலந்த எத்தகைய அனைத்தும், கனவின் காட்சியென மறக்கவும் முடியும்! நாம் ஸ்ரீபகவானின், குழந்தையே என்ற முழுமையான நம்பிக்கையால், குறையாத ஆனந்தம் அணு அணுவாக தோன்றும்! இது இந்த ஓசையின் அனுபவமாகும்!



உ

# "நிதித்யாசம்:"

நான் என்றவ் எனது முழுமையாக அழிந்து,
எல்லாம் நீயே! எல்லாம் உன்னுவ்! எல்லாம்
உனதே! என ஆகி விட்டால், வினை சம்பந்த,
"பற்றுவேரும்" அது சம்பந்த பாசப் பிணைப்புகளும்,
அது சம்பந்த, வினைத்தொடர்புகளும், வெள்ளை வஸ்திர
த்தில் ஒட்டிய மஞ்சள் வெய்யிலில் எப்படி மறைந்து (விடுமோ)
அப்படி நானே மறைந்து விடும்! இங்கு ஒன்றுமில்லா,
தூய வெண்மை வஸ்திரம் (சொர்ணம் கபடம் சூது (வாது) இல்லா
தூய்மையான உள்ளம்) ஒன்றே உண்டு! அந்த தூய்மை
யான, உள்ளத்தால்! (அதாவது) அந்த மனத்தான உள்ளத்தால்!
பரமாத்மாவாகிய ஸ்ரீ பகவானும்! "தத் த்வம் அஸி" ஆகிய தம் ஒன்றும் தாத்பரமாக இணைந்து ஒன்றே
அறியாமையின் ஜீவாத்மாவாகிய நானும்!
காவாந்த பரசொரூபமாகிய அதுவும்! அதாதன்மையில்,
"எல்லாம் ஒன்றே! எல்லாம் ஒன்றே!" என்றநிலை
யில், ஸ்வய அனுபவத்தோடு, ஜகத் ஜீவ மயக்கத்தை விட்டு!
ஈஸ்வராதிகளின் பயத்தையும் விட்டு! ஜகத் ஜீவ ஈஸ்வரா
திகள், அனைத்திலும், யாமே ஆத்மா என்றும், எமக்கும்
ஜகத் ஜீவ ஈஸ்வராதிகளே ஆத்மா என்றும், ஓர்மித்த தன்மையில்

"விரிந்து! விரிந்து! விரிந்து! விரிந்து!"

அங்கு மனம் பேசா மௌனமாகி, ஆத்மா சாக்ஷாத்காரம் பெற்று
பரப்பிரம்மானந்த சமுத்திரத்தில் பூரிப்பு பூர்ணத்துவமயமாக நிறைந்து
அதுவே நானாக! நானே அதுவாக! சும்மாவே சுகமாக இருக்க வாருமே!



# உ

(102)

பொருந்தி! வருந்தி! விரிந்து!: – அப்யாசம் இடைவிடாமல் செய்வது!

பொருந்தி! வருந்தி! விரிந்து: – அப்யாசத்தை, கடும் பிரயாசையுடன், அதிக சிரத்தையுடன், செய்வது!

கடும்பிரயாசை என்றும், வருந்திய சிரத்தை என்றும், யாம் சொல்வது எல்லாம், ஓர் சிறிய மாற்றம் தான்! ஒரு அன்பர் பாடுகிறார்!

சாற்றிக் கிடக்கும் ஏழு கோடி மந்திரம் என்ன
"மாற்றப்பிடிக்க" கண்டாய்??? வகை அறியா
மாந்தர் தாம் செய்த தவம், ஆற்றில் கரைத்த புளியெனப்
என்றே, இதை கருத்தான் நிகழவிக்கால்? போகும்!!!

"நான்" அல்ல என்றும்! "எல்லாம் நீயே" என்றும்!
"என்னை" அல்ல என்றும்! "எல்லாம் உன்னை" என்றும்!
"என்னுடையது" அல்ல! அல்ல! என்றும், "எல்லாம் உன்னுடையது" உண்டு! உண்டு! என்றும்,

உன்னுடைய எண்ணம், சொல் செயல், ஆகிய இம்மூன்றையும் மாற்றிவிட்டால் போதும்! இந்த இல்லாத உலகம், இல்லாமலேயே போய்விடும்! மேலே கூறிய மூன்று நிலைகளிலும் (ஸ்ரீபகவானிடம்) நீங்கள் சர்வார்ப்பணமாக விட்டுவிட்டால், அவனிடம் (ஸ்ரீபகவானிடம்) விட்டபிறகு, உங்களுக்கு பொருளும் இல்லை! வார்த்தையும் இல்லையென, உங்களின் உலகம் தானே விலகும்!



# எப்படியிருக்கிறது?

என கேட்கிறீர்களா?
உங்கள் மூலகனம், இவ்வுலகத்திற்கு; எதுவென்றால்? அதாவது, உங்கள் முகவீடு இவ்வுலகத்திற்கு. நான், என்னுடைய, என்றுடையது, என்ற அஹங்கார அதிகார அபிமானமே தான், உங்கள் முகவீடாகும்! உங்கள் முகவரிப்படியும், இவ்வுலகில், நீங்கள் பெறும், சரக்கு என்பது மண், பொன், பெண், உறவு, சுற்றம், நட்பு, தொழில், பணம் இவைகளில் "உறவும் உரிமை"யும் "உடைமை"யும்! எல்லாம் மண்ணே! மண்மயமே! கொண்டாலும் அநுமதியாகும்! (இதுவே உலகம் தரும் சரக்காகும்)

நீங்கள் இவ் உறவும், உரிமையும், உடைமையும், இதன் விளையாட்டும் இனி போதும், என நிறைவுடன், (வெறுமையில்லாமல்) ஸ்ரீபகவானின் மாயாவிடம், விட்டுவிட்டால், எனக்கு (உலகிடம்) உதவாத, உதவ முடியாத நீங்கள் உங்கள் ஸ்ரீபகவானிடமே, போய் விடுங்கள். அவனே (ஸ்ரீபகவானே) **வெறும் பயல்** (ஒன்றும் இல்லாதவன்! ஒன்றும் உதவ முடியாதவன்! ஒன்றும் செய்ய இயலாதவன்) நீயும், அவனுடனே சேர்ந்து, வெறும் பயலாகவே போவாயாக என உன்னை வெறுத்து ஒதுக்கித் தள்ளிவிடும்! அதன் பிறகு ஸ்ரீபகவான் கருணையில் கிடைப்பதோ

(A) எந்த உபாதையும் இல்லாத ஆனந்தம்!
(B) சுகமாக அனுபவிக்க முடியும் பிராரப்த கர்மா! (இன்பதுன்பமில்லை)
(C) ஓகோ! ஆஹா! என்ற வாழ்வு இல்லாத, அமைதியான வாழ்வு!
(D) இறை, குருவுடன் இணைந்த, ஆத்மானந்த நிறைவு!
(E) உன்னைத் தேடிவந்த போலவே, அதிசய பந்துக்கள்!
(F) ஸ்ரீபகவானுடன் இணைந்த பந்தமுக்தி இல்லாத, பரமுக்தி என்ற ஜீவன் முக்தி!

வெறும்பயல் :- தான் அடங்கி, தனக்குள் அனைத்தையும் அடக்கியவன்!



(104)

# உ

இதை குறிப்பாக கவனித்தால், இந்த

"உண்மை" விளங்கும்!

முன் பாடலில் கூறிய படி, அம்மூன்றையும், மாற்றிப் பிடிப்பதுதல்?

(1) ஜீவபந்தம் ஒழிந்து நாசமாகும். (2) ஜீவகர்த்தத்துவம் ஒழிந்து நாசமாகும். (3) உன் உறவும், உரிமையும், உடைமையும், ஸ்ரீபகவானுடையதாகும்போது, தோஷ குணங்கள் எல்லாமே, உன்னை விட்டு, ஒழிந்து நாசமாகும். (4) அனைத்து சாதனைகளும், இந்த ஒன்றிலேயே, முடிந்து விடும். (5) இறை குரு உபாசனையும், அவர்கள் கிருபையும், இந்த ஒன்றிலே முடிந்துவிடும் (6) நான் அல்ல நீ! என்னால் அல்ல உன்னால்! என்னுடையதும் அல்ல உன்னுடையது! என முழுமை பெற்று விட்டால், அந்த விநாடியே

**உலகம்** உன்னை விட்டே ஆகவேண்டும். (உலகம் உன்னுள் அடங்கும்) (வேறு வழியில்லை)

**ஸ்ரீபகவான்** உன்னை ஏற்றே ஆகவேண்டும். (ஸ்ரீபகவானின் குழந்தையென ஆவாய்) (வேறு வழியில்லை)

குணதோஷங்கள் அனைத்தும், நாசமாகியே தீர வேண்டும். (வேறு வழியில்லை)

ஸத்வகுணமும் அது முடிந்து நிர்குணமும் உனக்கு, வந்தே ஆக வேண்டும். (வேறு வழியில்லை)

கற்பனையின் மனம் அழிந்து, நாசமாகியே ஆக வேண்டும். (வேறு வழியில்லை)

மனம் அழிந்து நாசமாகி, மனம் மனமற்றதாகி, அதுவே அறிவாகவும், பேரறிவாகவும், ஆத்மஜோதியில் நீ, ஜீவன் முக்தனாகியே தீர வேண்டும். (வேறு வழியே இல்லை) இந்த நிலையால், மஹா மௌனத்தில் லயமாகி, சும்மாவே சுகமாக இருக்கலாமே!



உ

(105)

① மிகவும் விரும்பி பேசாதே!

② பலரிடமும் பாடம் கேட்காதே!

③ ஒன்றைப் பற்பல அர்த்தங்கள் பிரிக்காதே!

இதுவே, ஆத்ம ஞானத்தில், ஸ்வய அனுபவமாகும்!

① இக்கலியில், வேத வேதாந்த சாஸ்திரங்களை, "படித்தாலும்" பிரயோஜனம் இல்லை!
"படிக்காமலும்" இருக்கவும் முடியவில்லை!

A படித்தால், நிறைய விளக்கம் கொடுக்க வேண்டியுள்ளது!

B ,, பேசிப் பேசியே, காலம் விரயமாகிறது!

C ,, பேச்சாளி ஆகலாம்! அனுபவம் பெற முடியாது!

D ,, வார்த்தை அடர்ந்த காடு! உள்ளே போனால் திரும்ப முடியாது!

E ,, பேர், புகழ், பட்டம், பதவி, பெறலாம்! உன்னை இழந்து விடுவாய்!

② A பலரிடம் பாடம் கேட்டால், "குழப்பமே" மிஞ்சும்!

B ,, தர்க்க குதர்க்க வாதம் பண்ணலாம்! குற்றம் குறை தோன்றும்!

C ,, பலவிதமாய் தோன்றுவதால், ஜவம் காண முடியாது! வறட்டியே பவன்!

D ,, ஜீவன் முக்திக்கு, விளக்கம் கொடுக்கலாம்! ஜீவன் முக்தி பெற முடியாது!

E ,, குரு ஆகலாம்! குரு ஆக்கலாம்! ஜீவன் முக்தியை, சொல்லலாம் பெற முடியாது!

③ A பற்பல அர்த்தம் காண்பதால், (பிறரை) "சந்தேகம்" (அருந்ததை) தொலையாது!

B ,, வாதத்தில் வெல்லலாம்! ஆனால் தன்னை வெல்ல முடியாது!

C ,, "வினா" பெருகும்! "மனம்" விரியும்!

D ,, பற்பல முறை சிந்திக்கலாம்! ஒருமுறை இருக்க வேண்டும்!

E ,, பொறுமை! அமைதி! சாந்தி! ஆனந்தம்! பெற முடியாது!
அகங்காரம்! ஆதிக்கம்! அதிகாரம்! போட்டி, பொறாமை யாவும்
மனதை ஆவேசம் உண்டாகும்!



ஆகவே "பேசுவதை" குறைக்கலாம்!
"ஒருவரிடமே" பாடம் கேட்கலாம்!
"இறைகுரு" கிருபையால் வெறும்,
ஓர் கருத்திலேயே "ஊர் ஆழ்ந்து" சென்று,
மயமாகி கலந்து விடலாம்!
கலைஞனே! வித்வானே! பண்டிதனே! எந்த குருவாகவும்
"ஆகாமல்," ஓர் ஸந்தான மாணவனாகவே இருந்து,
மறவா நிலையாகிய, ஜீவன்முக்தி பெற்று, சும்மாவே சுகமாக
இருக்கலாமே!

"குற்றம் குறையாக" { காணாதே! கேளாதே! பேசாதே! தீண்டாதே! }

என்பதை விட, இவை நான்கிலும்; "விகற்பன்" பண்ணி "மனதை" கெடுத்துக் கொள்ளாதே! என்பதே ஸத்தியம்!
எல்லாம் அவனே! எல்லாம் அவன் பொருள்! எல்லாம் அவன் செயல்! அவனன்றி அணுவும் அசையாது என்பது, உன் அனுபவத்தில், ஸத்தியமானால்! மேலே கூறிய, நான்கிற்கும், இடமே இல்லாமல் போய் விடும்!
தீயதைப் பாராதே என்பதை, தீயதாகப் பாராதே என உணர்!
தீயதைக் கேளாதே என்பதை, தீயதாகக் கேளாதே என உணர்!
தீயதைப் பேசாதே என்பதை, தீயதாகப் பேசாதே என உணர்!



உ

முன்பு சொன்ன நிலையில், இறை குரு
உணர்வு, முழுமையாக இருந்தால்,
ஸ்பரிசத்திறைப் "உணர்ச்சிகள்"
அவசியம் வராது அது "மெய் உணர்வாய்"
அவஸ்யம் மாறும்! இது இவ்வேள்வியின் அனுபவம்!
எம் வள்ளுவன் சொல்வது:— சுருக்கமாக கற்றுக் கொள்!
அதுவும் குற்றம் குறைகள் நீங்கக் கல்! கற்றபடி நில்!
என்றான்! அக் குற்றம் குறைகள் "நீங்குவதற்கும்! நீக்குவதற்கும்" கற்பாயாக!

பிறர் குற்றம் குறைகளை { மன்னித்தால் அது நீங்கும் நிலையாகும்!
மறந்தால் அது நீக்கும் நிலையாகும்!

இன்னா செய்தாரை, ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்! என்பது பொருத்தம்!
மற! மன்னி! விட்டுக்கொடு! அங்கு நன்மை செய்!
என்பதே ஸ்ரீ மஹான்களின் அனுபவமாகும்!

விட்டுக் கொடுத்து வாழ்வது
அவசியமாகும்

இதை உணர்வாயாக:— நீ ஜீவன் முக்தி அடைய வந்தவனே!
உலகை ஆளவும்! பிறரை அடக்கி ஆளவும்! பட்டம், பதவி
புகழ், இவைகளை பெறவும்! பண்டிதனாகவோ! வித்வானாகவோ!
"ஞானோபதேசம்" செய்யவோ வரவில்லை!
"ஞானமாகவே" ஆக வந்தவனே நீ!!
பேர், புகழ், பட்டம் பதவி ஆகியவைகள், கர்மாவை பெருக்கும்!
ஜன்ம மரணத்தை கொடுக்கும்! அஹந்தையை வளர்க்கும்!



உ



ஆகவேதான், வாதகமான நூல் ஏந்காதே படிக்காதே! போதிக்காதே! என்றார்கள்!

# "வாதகமான நூல்":—

தர்க்க குதர்க்க சாஸ்திரங்கள்!

வாதனையும், வேதனையும், சோதனையையும், பேர்புகழ் பட்டம் பதவி, தரும் நூல்களையும் ஏந்காதே என்றார்கள்! அனுபவ ஞானிகளால், அனுபவ முறையோடு, அவர்கள் சாதனையால், பெரும், ஞானுபவ நூல் மட்டும் உணர்க!

# "ஒன்றை பற்றி ஏகத்திரு!"

என்ற நிலையில் ஒன்றை மட்டும் பற்று, மூர்க்கவன சக்தியும், தற்காப்பு சக்தியையும், விடுத்து தற் கவன சக்தியுடன்!

ஒருவனுக்கு ஒருத்தி என்றும், ஒருத்திக்கு ஒருவன் என்றும், உள் ஆழ்ந்து சென்று, கரைந்து கலந்து விடுவாயாக! நீ உன் இறை குரு கிருபையால் பெறும் அந்த ஒன்றை, "**ஸ்வய அனுபவம்**" பெறும் வரை, அதாவது, நாமரூப ஆக ஜீவ பழக்க வழக்க குண **தோஷங்கள்!** அழிந்து நாசமாகும் வரை, "**மனன**"த்திலும், "**நிதித்தியாச**"த்திலும், இருந்து கரைந்து மயமாகி மறைவாயாக! உன் இறை குரு நம்பிக்கையே, உன்னை அவ்விதம் ஆக்கும்! அந்நிலையில் மோன மௌனம் பெற்று, சும்மாவே சுகமாக, இருக்கலாமே!



உ



தோன்றின மறையும்! மறைந்தன
தோன்றும்! சிறுத்தன பெருக்கும்!
பெருத்தன சிறுக்கும்! ஆகிய இவற்றில்,
அனைத்து "நாமரூபமும்"
தோற்றும்! இருக்கும்! மாறும்! மறையும்! இவை
நான்கும், இல்லாத உலக காரிய இயக்கம் என
"பேசப்படுகிறது" ஆனால் உண்மையல்ல!
எப்படி யென்றால் "அனைத்தும் மண்ணே"!
மண்ணுக்கு அன்னியமாய், ஏதும் இல்லை யென்பதே,
சத்தியம். ஆனால் இந்த மனம் படைத்த மனிதனிடம்
மட்டும், இந்த மனம் போடும் "ஆட்டம்"
வாக்காலோ, வரியாலோ, சொல்லில் அடங்காது!
கனவிலும், நனவிலுமே, இவ்வுலகம் தோற்றுகிறது.
"கனவில்" பொருள்கள் அனைத்தும் இந்த மாயா
"மனதை" தேடி வருகிறது. அது ஏமாற்றமாய்
முடிந்து விடுகிறது (நனவில்)
"நனவில்" பொருள்களை எல்லாம், ஆடி, தேடி
ஓடி, நாடி பேய் போலும், நாய் போலும், இந்த மாயா
"மனம்" கடும் பாடுடன் அலைகிறது! ஆனால் இந்த அலைச்சல்,
ஏமாற்றமாய் தோன்றுவதில்லை! (இதுகளை போல் முடிவதில்லை
காரணம்? என்பதால் தொடர்கிறது)



# உ

(110)

(1) கனவில் வினை உடல் பிணமாய் கிடக்கிறது!

"சூட்சமமாம்" சூட்சம பொருள்களையே தேடுவதும், அடைவதும், அதன் அநுபவமும், "வினை" தொடர்பில்லாத் தன்மையினால் எண்ணத்துடன் முடிந்து விடுகிறது! ஆகவே அது **பொய்** ஆகிவிடுகிறது!

(2) நனவில், வினை உடல் சஞ்சாரம் செய்கிறது! அதனால் "**வினைபரிமாற்றம்**" செய்யப்படுகிறது. அவ் வினை பரிமாற்றத்தினால் புண்ணிய பாப வினையும், ஜனனமரணமும் தொடர்வதால், நனவு "**மெய்**" ஆக தோற்றுகிறது. ஆனால் அது மெய்யல்ல, என்பதே சத்தியம்! முன் சொன்ன நிலையால் தோன்றின மறையும்! மறைந்தன தோன்றும் என்றும்! இருந்தன பெருகிடும்! பெருத்தன இறுகிடும்! என்றும்!

## "உண்டன மலமாம்"!
## "உடுப்பன அழுக்காம்"!

என சத்தியமாக உணரப்பட்டு விட்டால், நனவும் கனவாய் முடியும்! முடிய வேண்டும்! அது தொடராது!

குறிப்பு:- எல்லாம் மண்ணே என்றும், மண்ணுக்கண்ணியம் எதும் இல்லை என்றும், நாம் உண்டு கழித்த மலமே, திரும்ப உணவாக வருகிறது என்றும், நாம் புனையும் (உடுப்பும்) அணிவதும், அழுக்கேயன்றி தூய்மை இல்லவே இல்லையென்றும், "**மலமே**" அழுக்கே ஆகிறது, கற்பனையான தூய்மையும் ஆகிறது என்றும், உணர்வால் உணர்ந்தால் பொதும்!



உ (111)

## மன அழுக்கு நீங்கிவிடும்! பாடம்

மனதிற்கேயன்றி, உனக்கல்ல!
உனக்கல்ல என்று, யாம் சொல்வது,
நீ சைதன்ய சொரூபமாகிய எம் அம்சமே!
உண்பனவற்றிலும்! உடுப்பனவற்றிலும்! அனுபவிப்பன
வற்றிலும்! "நீ தேடியதாக" பாவனை செய்கிறாயே!
அந்த பொய் பாவனையை கெடுத்து "அவனுடைய
தாக" பாவனை செய்தால்; வினையின் பெருக்க முடிவில்!
மனதின் மயக்கமும் இல்லை! அத்தொலிந்த நிலையில்,
அதுவே நாம்! நாமே அது! என சும்மாவே சுகமாக இரு!

மஹாபாரதத்தில், ஓர் சம்பவத்தை உரைப்போம்!
குந்திதேவியின், ஐந்து புதல்வர்களில் பீமன்
தவிர, மற்றும் அனைவரும், ஆச்சாரம், அனுஷ்டானம்,
பூஜாவிதிகளில், அதிசிறப்பாக, இருந்தார்கள்
(திரௌபதி உட்பட) அதிகாலையில் எழுதல்! நித்திய
கர்மாக்களை, முதலியவைகளை குறைவின்றி செய்தல்! சர்வம்
தவறாமல் செய்தனர். புஷ்பங்களை வைக்கும் போதும்
போடும் போதும், ஆரத்தி பண்ணும் போதும், மந்திர
ஸ்லோகங்களை ஸ்பஷ்டமாகவும் முறையாகவும்,
சொல்லி செய்தனர். அதனால் (ஸ்ரீ பகவானும்)
ஸ்ரீ சிவ பெருமானும்! ஸ்ரீ கண்ண பெருமானும்! அதிக
மகிழ்வடைந்தனர். அவர்களுக்கு (பாண்டவர்
களுக்கு) அப்போதைக்கப்போது வரும் இடர்
பாடுகளையும் நீக்கி வந்தனர்! ஓர் நாள்,



உ



மாகசிவராத்திரி போலும்?

நம் கண்டீபன், அதிகாலையில் எழுந்து "சிவார்ச்சனை" உட்பட ஜபதபங்களை, செய்து முடித்துக் கொண்டான் புஷ்பாஞ்சலியோ! மந்திர ஸ்லோகங்களோ! முறையாக, அனுஷ்டானப் பிசகில்லாமல், செய்து, தம் பூஜையை முடித்துக் கொண்டான்!

அன்று பீமசேனன், சூரியன் உதித்து, சுமார், ஒன்பது மணி அளவில் தான், எழுந்தான்! தாய் குந்திதேவிக்கு, பீமன் மேல் சற்று வருத்தம். தாம் தான் என்ன செய்வது "முரடனாக"வும்! "சாப்பாட்டு" ராமனாகவும் இருக்கிறானே? "பக்தி" என்பதே இவனிடம், காணப்படவில்லையே என்று வருத்தமுடன், அன்று பீமனிடம் சென்று, கோபத்தை காட்டினாள்!

ஏ மூடா! சோம்பேறி! பீமசேனா! இன்று நீ, இவ்வாறு செய்து வந்தால்தான், உனக்கு சாப்பாடு என கண்டிப்பாக கூறிவிட்டாள்.

அம்மா! பசி கோரமாக இருக்கிறது. ஆகவே சாப்பாட்டை முடித்து, விட்டு பூஜை செய்கிறேனே! என கெஞ்சினான் பீமன். தாயார் சம்மதிக்கவில்லை. பீமன் அருகில் இருந்த, கங்கையில் இறங்கினான்.



உ

(113)

இப்பளவு ஜவத்தில், நின்று கொண்டான். ஓர் மூக்குமட்டை போட்டான்! தந்தசக்தி, அங்கசக்தி, இவையெல்லாம், அவன் ஜாதகத்திலேயே இடையாது என்பதே முக்கியம்!

# "பீமன்செய்தபூஜை"!

(1) ஜவத்தை இருகைகளாலும் அள்ளி அள்ளி ஜவத்திலேயே, நிதானமாக விட்டான்!

(2) அவன் சொன்ன மந்திரம்:— ஹே ப்ரபோ! தயாநிதி! தயாஸாகரா! பக்தரக்ஷகா! சாஸ்திர புராணம், சங்கீதம் யாம் அறியோம் "ஆகம நூல்வழி, அனுஷ்டானம் செய்தறியோம்!"

## வேகமுடன் வருவாய்!

இந்த சரீரம் உன் கைபதுமை! உன் கை ஆயுதம்! உன் கைகருவி! இதுவே ஸத்தியம்! ஸத்தியம்!! ஸத்தியம்!!!

(3) "எல்லாம்நீயே"/எல்லாம்நீயே! "எல்லாம்நீயே"! இது ஸத்தியம்! இது ஸத்தியம்! இது ஸத்தியம்! என அவன்



உ



சொல்லும் போது, மனம் உருகியது.
கண்ணீர் பெருகி, அருவியென அந்த
கங்கையில் சங்கமமானது!

(4) முடிவில் அவன் அர்ச்சனை, எப்படி என்றால்?
"அந்த" புஷ்பங்களும்! திருத்
துளாய்களும்! வில்வதளங்களும்! சர்வமும்,
"உனக்கே அர்ப்பணம்!!!"
என்று, அவன் பூஜையை முடித்துக் கொண்டான்.
இப்பூஜையே, சர்வார்ப்பண பூஜையாக முடிந்தது!
இதைவிட, சிறப்பான பூஜை எங்கும், எவ்விடத்தும்,
எவரிடத்தும், இல்லையென்றே பிரமாணமாகச்
சொல்லுவோம்! எம் பிரேமசேனன் செய்த, அப்
பூஜையால், என்ன நடந்தது என்றால்? அந்த
"பூஜையன்" / "பூஜாரி" /
"பூஜாரன்"! ஆகிய அம்மூவரையும்
காணவில்லை. அம்மூவரின் இருப்பிடத்திலும்,
புஷ்பங்களும், திருத்துளாயும்! வில்வதளங்களும்!
அம்மூவரையும், மூடி, அம்மூவரின் இடங்களிலும்
மஹாமேருவைப் போல், மூன்று புஷ்பாஞ்சலிமலைகள்



உ



காட்சி அளிக்கின்ற, அம்மவர் மலகள், தேவகணங்கள்! அன்றி அன்றி, அமர்ந்தும் அவைகுறைய விரித்த காரணம்?

"சர்வார்ப்பணம்!"

என்பது, அத்தகைய, பரிபூரணமான தாகும்! இது இந்த அடியனின், ஸ்வய அனுபவமாகும்!

இச்சரீரம் உன்னைப் பதுமை! உன்னை ஆயுதம்! உன்னை கருவி! இதுவே ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்!! எல்லாம் நீயே! எல்லாம் நீயே! எல்லாம் நீயே!! பூஜைகள்! அபிஷேகம்! ஆராதனை! ஆரத்தி! நிவேதனம்! அனைத்து "ஆகமமும்!" இதனுள் அடங்கி விடும்!

இதை செய்யும் போது, உள்ள நெகிழ்வு! புளகாங்கிதம்! மயிர்கூச்செறிதல்! உள்ள உருக்கம்! கண்ணீர் பெருக்கம்! இவை இருந்தால் போதும்! "சும்மாவே சுகமாக" இருக்கும் நிலை பெற்றுவிடலாம்!

"ஸத்" ஸத்தாகவே இருந்தது! அந்த ஸத்தே, "ஸப்தமாக" வடிவெடுத்து "சித்தம்" "மனதை" வைத்து விளையாடியது! அந்த விளையாட்டின் ரஸிகனாக "அரங்கா" (ஆதி) "ரதனை" ஏற்றுக் கொண்டு



உ



அதை "ஆனந்தம்" என ஆக்கிக் கொண்டது! அந்த ஆனந்தமானது இக்கலியுகத்தில், இன்ப துன்பமாக, மாறிவிட்டது! எனச் சொல்லலாம்! இதைத்தான் நம் முன்னோர் "ஸத் ஸித் ஆனந்தம்" என ஏற்றுக் கொண்டனர்! இதை எம் வஷிஸ்டர்பிரான், ஸ்ரீராமனுக்கு சொல்லும்போது;- ஹே ராமா! ஸந்தே ஸித் ஆனது என்றும்; ஸித்தே ஆனந்தம் ஆனது என்றும்; ஆகவே இவ்வுலகம், ஆனந்தமயமே என்றும்; "மனோபலமே" இன்பதுன்பமாக, வடிவெடுக்கிறதென்றும்; இவ்வுலகை, அசைவில்லாமல் பார் என்றும்; அங்கு நீயும், இவ்வுலகமும் ஸத்தாகவே இருப்பீர்கள் என்றும்; இதன் சாதனையானது, "வருவதையும்! போவதையும்!" போக்குவரவில் மயங்காதே! என்றும்; கவனியாதே! கலங்காதே! "ஒன்றானது" எவ்விடத்தும் இருக்கின்ற வஸ்துவே இருக்கிறது! அதுவே நீயென ஐயம் திரிபு அற, உரைத்தார்; அவ்வண்ணமே, அசைவற்று இருந்து கொண்டு, சும்மாவே சுகமாக இருக்கலாமே!



உ

(117)

திவ்ய தேஜோமயமாகியும்!
அகண்ட ஜோதிஸ்வரூபமாகியும்!
சொல்லவொண்ணா, விளக்கவொண்ணா,
வரிவடிவில், எழுதவொண்ணா "தாம்
தாமாக" இருக்கும் "பரிபூரணத்தை"!
"மனம்" படைத்து, அதாவது மன வலையில் (மோக
வலையில்) சிக்கிய, "மனிதன்" மட்டுமே, நாம
ரூப ஜகத் ஜீவ, சொரூப நிலையில், தோற்றங்களாக
கண்டு, கேட்டு, பேசி, தொட்டு, அனுபவிக்கும் மது "போ
தை" நிலையால், இன்பதுன்பமாக, காண்கிறான்!

ஆனால்???

ஸ்ரீ பகவான் கருணையாலும், ஸ்ரீ ஸத்குரு கிருபையினாலும்,
பூர்வ புண்ணியத்தினாலும், "பயன்" கருதாத கர்மா
வினாலும், (எதிர்பார்ப்பு என்ற, வியாபாரம் இல்லாத்
தன்மையாலும்.) தன்னை அறியும் அறிவு, பிரகாசித்ததனால்
ஸ்ரீ பகவானையும், தன்னையும், ஒன்றாக உணர்ந்து, அந்த
ஸ்வய அனுபவத்தினால், அதுவே நாம்! நாமே அது!
என்ற ஸ்வய அனுபவம் பெற்றவர்களுக்கு, நாமரூப ஜகத்,
ஜீவ சொரூபங்கள் அனைத்தும், பிரம்மானந்தமயமான,
பரசொரூபமாகவே தோற்றும், என்பதை விட,
அதுவாகவே (பரமாகவே) இருப்பார்கள். இந்த அனுபவத்தில்
சும்மா, சுகமாகவே இருக்கலாமே!



உ



மேலே கூறிய நிலையால், மன அசைவற்று,
அதாவது நாமரூபஜக ஜீவ, மயக்க கலக்க,
பயம் இல்லாமலும், "நான், என்றல், எனது,
**பூரணமாக**" அழிந்த நிலையால்,
தாம் ஏற்று வந்த, கர்மாவை மட்டும், எந்த விசாரணையும்
இல்லாமல், செய்து முடித்தும், வேறு கர்மாவை தேடாமலும்,
இருந்தால் போதும். அவன் தாலம், தாங்கி வந்த,
"**காரியம்**" முடிந்து விட்டதென, உறுதிகொண்டவன்
செய்பவனே
அவரே, செய்யும் காரியத்தை, செய்து முடித்து விட்டார்!
இனி செய்ய வேண்டிய, காரியம் ஒன்றுமில்லை! அந்நிலையால்,
அவர் சும்மாவே, சுகமாக இருக்கலாம்!
தன்னை அறியும், அறிவை அறியாமல்,
வேத வேதாந்த, சாஸ்திரம், புராண இதிகாச கதைகள்,
மந்திர சக்திகள்! அஷ்ட சித்திகள்! கல்ப கோடி காலம்,
தாலம் அறியாமலும், வாசிபுகையே, இருக்கும் நிலையும்!
மேலும், **15** கலைகளையும் கற்று தேர்ந்து, முதிர்ச்சி ஆனாலும்!
இவை அனைத்தும் "**நிஷ்பலமே**"! அதாவது,
ஒரு பிரயோஜனமும் இல்லை, யென்பதே ஸத்தியம்!
இதைப் போலவே, "**தெய்வபலம்**" முழுமையாக
பெற்றிருந்தாலும், அதாவது உன் உபாசனா மூர்த்தியின்
"திருவருளால், அம்மூர்த்தியிடம் உறவாடவோ! உரையாடவோ
**துவைத நிலையால்**"! கல்ப கோடிகாலம்,
சகஜமாக புழுகும் நிலையில் அனுபவம்,



"பழகிறதும்" நாம் "பாழானதில்" பெறுவிட்டால்

அதாவது, ஜீவர்கள் தத்துவம் அறியா விட்டால்! ஒரு பிரயோஜனமும் இல்லை! அந்நியாயம்;

அவன் "மாயானை" வைத்திருப்பதால், அவன் ஸ்ரீ பகவானாக இருக்கிறான் என்றும்; நாம் "மனதை" வைத்திருப்பதால், நாம் ஓர் "பந்த" ஜீவனாக இருக்கிறோம் என்றும்; அவன் மாயானை விட்ட நியாயமும்; நாம் மனதை விட்ட நியாயமும்; (அவன் அரசனுமல்ல! நாம் சேவகனும் அல்ல! என்ற நியாயமும்) ஜீவமயக்கமும்! தெய்வபயமும்! அற்ற நியாயம், நாம் "முழுமையாக" "சுதந்திரமானவயே" என பிரம்மானந்த சுகசொரூபத்தில், சும்மா வேடிக்கையாக இருக்கலாமே!

பொறி ஐந்து என்றும், புலன்கள் ஐந்து என்றும், கரணங்கள் நான்கு என்றும் சொல்வதில், இந்த அந்தக்கரணங்களே, மிகவும் முக்கியமாகிறது. அந்தக் பந்தத்தையும் இயக்குவதும். மேலே சொன்ன வினைகளை தேடுவதும், அப்புண்ணிய பாவத்தால், ஜனன மரணத்தை தேடிக் கொள்வதும், இந்த அந்தக்கரணங்களே ஆகும். என ஸ்ரீ ஞானிகள் சொல்வார்!



(120)

உ

இந்த அந்த கரணங்கள்:- "மனம், புத்தி, சித்தம், அஹங்காரம்" என நான்கு ஆகும்.

மனம்:- நாமரூபங்களை, கற்பனை செய்வதாகும்.

புத்தி:- மனதால், செய்த நாமரூப கற்பனைகளை, இது இன்னது! இது இன்னது! என்று "வியரத்தோடு" "விகாரத்தை" (பேதத்தை) உண்டு பண்ணுவதாகும்.

சித்தம்:- அப்படி பேதப்படுத்தி, விகாரம் அடைந்ததை, "வாக்கால்" பல நிலைகளிலும், பேசி பேசியும், "காதுகளால்" மற்ற பல நிலைகளிலும் குற்றம் குறை பேத உணர்வோடு, கேட்டு கேட்டு, விரோத, விபரீத விசித்திர, விரோத, துரோக விகார, கற்பனைகளை செய்து "விகாரத்தை" (பிரச்சனைகளை) உண்டு பண்ணுவதாகும்.

இவ்வுலகமே, விவகார ஸத்தியமே யல்லாது உண்மையில் ஸத்தியமல்ல! பேசிப்பேசியே உலகிற்கு, உயிர்கொடுக்கிறோம்.

அஹங்காரம்:- மேலேகூறிய மூன்றினையும், சொரூபமாக தோன்றும் உலகை நான் என்னை, எனது, கற்பனை என்ற நிலையில், அஹங்கார "வெறியால்" ஆதிக்க, ஆக்கிர, அபிமான



உ

ௐ

காண்பது, கேட்பது, அதுபற்றி பேசுவது,
இம்மூன்றுமும், விபரீதமான கலி தோஷ,
குணவிருத்திகளை, உண்டுபண்ணி, புண்ணிய
பாபங்களை, சேர்ப்பது அஹங்காரமாகும்.
ஆகவே இந்த, அந்தக்கரணங்களை, வெளி முகமாக போக
விடாமல், அகமுகமாக (உள்நோக்கி) செலுத்தும்படி
தொண்டோமானால், அதாவது, "நம்முள்"
இருக்கும், ஸ்ரீபகவானிடம், உன் உணர்வாகவே உள்ளக்
கசிவுடனும், உருகும் எண்ணத்துடனும், கண்ணீர் பெருக்
கத்துடனும், "எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம்
உனதே!" என, சர்வார்ப்பணமாக, அர்ப்பித்து
விட்டால், கரணங்கள் நான்கும், ஒன்றுபட்ட தன்மையால்
கர்மாவும் பெருகாது! வந்த கர்மா மட்டும் முடிவுறும்!
ஜன்மாவும் இல்லாதொழியும்! எல்லாம் நீயே என, சர்வார்ப்
பணமாக விடும்போது, மனதுக்கு அங்கு வேலை இல்லை!
மனம் செயலற்றால், நாமரூப ஜகத்திற்கும் இருப்பு இல்லை!
(அதாவது மற்றவனுக்கு இருக்கும்! உனக்கு மட்டும் இருக்காது!)
நாமரூப ஜகம், உனக்கு இல்லாமல் போனால் "வீணுடல்"
உனக்கு பாரமாக தோன்றாது! அதாவது அதன் இயக்கத்தை
அறியமலே, தானே நடைபெறுவதை உணரலாம். அந்த
ஆத்ம சுகத்தோடு, சும்மாவே சுகமாக இருக்கலாமே!



"ஸித்தே" தமக்குத் தாமே, விளையாடும் நிமித்தமாக, "ஸிதம்பரம்"

அசைவதாகவும், அசைவிப்பதாகவும்

ஆனது என, ஸ்ரீமஹான்கள் சொல்லுவார்கள்!

அந்த "ஸித்தே" மனம், புத்தி, சித்தம், என ஆனது!

" அனந்த ஜீவகோடிகளையும், நாமரூப கற்பனை செய்தது!

" ரஸனையான விளையாட்டிற்காக, அஹங்காரமாய் ஆனது!

" மரம் செடி கொடிகளாகி, ஆகாரம் என ஆகிக் கொண்டது!

" உணவு, உடை, இருப்பிடங்களை தாமே தேடிக் கொண்டது!

" திரிகர்த்தாக்களாகி, முத்தொழிலையும் செய்தது!

" திரிகர்த்தாக்களின், ஆஞாவிதிகளை கற்பித்தது!

" " பந்தமுக்தியென தாமே ஏற்படுத்திக் கொண்டது!

" சொந்த, பந்த பாசம், பிணைப்புகளோடும் விளையாடியது!

" கர்மாவின் நிமித்தம், அஹங்கார அபிமானத்தை ஏற்றது!

" " நியதி, புண்ணிய பாபங்களை ஏற்படுத்தியது!

" " " பிறப்பிறப்பையும், ஏற்படுத்தியது!

" ஜனனமரணத்தை விடமுடியாமல், தடுமாறியது!

" (பொன் பொருள் மோகத்திலும், பெண் இன்ப போகத்திலும்,) தடுமாறியதைப் போல் நடித்தது!

" ஸ்ரீபகவானாக இருந்து, வினைகளை தாமே ஏற்றுக் கொண்டது!

" (வினைகளை சாதகம் ஆக்கி ஆத்மாவை தோற்றமல் ஆக்கிக் கொண்டது)

" குருவாக வந்து, மனதைப் பக்குவப்படுத்தியது!



உ



"சித்தே" நம் விளையாட்டில், போதும் என "நிறைவு" பெற்றது!

சித்தே, அனைத்தையும், தம்முள் அடக்கிக் கொண்டு, "சத்தாகிய, சத்குரு" ஆகவந்து, எம்மையும்! ஸ்ரீபகவானையும், ஒன்றாக்கி பரசொரூபமாகிய சத்குரு தமக்கு அன்னியம், ஏதும் இல்லாது "ஒன்றாகி" தாம்தாமான "பிரம்மானந்த சாகரமாய்" ஸ்வயமாகவே இருக்கிறது! இதனை உணர்வதாவது!

(1) தாம் தாமான நிலையில், ஸ்வயம் ஜோதியான, சத்தியமாக இருந்தது!

(2) விளையாட்டின் நிமித்தம், அது தன்னை தானே, "சித்பரம்" என ஆக்கிக்கொண்டது!

(3) விளையாட்டின் ரஸனைக்காக, அறிவின் ஏகுணம் உள்ள நிலையில், "ஆனந்தத்தை" சொரூபமாக யும்! மன குணதோஷ நிலையில், இன்பதுன்பத்தையும்! ஏற்படுத்திக்கொண்டு, தாரசாரமாக விளையாடியது.



(12௪)

நமக்குத் தாமே, "போதும்" என நிறைவு வந்தவுடன்,
மேலே கூறிய, அனைத்தையும் தன்னுள்
"தானே" ஈர்த்து மறைத்துக் கொண்டு
தாம் தாமாக இருக்கிறது! அதுவே, நாமாக இருக்
கிறோம் என, சும்மாவே சுகமாக இருக்கலாமே!
அகம் பிரம்மம், ஜகம் பிரம்மம், அகமே எல்லாம்,
ஜகம், பரமும், ஜீவர்களும், சிறிதும் இல்லை!
என்று தன்னை உணரும் "ஆத்மஞானமான
எப்பலனும் கருதாமல், பல ஜென்மங்களில், து"
தேடிய புண்ணியமானது, "தர்மமாக" மாறிய
தன்மையினாலும், மனம் உருகி, கண்ணீர் பெருகி
மனத்தூய்மையினால், ஸ்ரீபகவான் "கிருபை"
பெற்ற தன்மையினாலும், ஸ்ரீபகவானே, ஓர் ஸத்
குருவாய் வந்து எம்மை "வலிய" ஆட்கொண்ட
தன்மையினாலும், அகண்ட "பரகருணை"யின்
தருணியால் "நிஷ்டை" நின்ற தன்மையினாலும்,
யாம் அதுவாகவே! அதுவே யாமாகவும்! இருக்கின்றே
ன சுகமாகவே, சும்மாவே இருப்பாயாக!



உ



அனைத்து மந்திரங்களும், யோகங்களும், பூஜைகளும், தியானங்களும், அனேக வழிபாட்டு முறைகளும், கோடானு கோடி சாதனை முறைகளும், உன்னுடைய

"கடும் சுயமுயற்சியின்"

ஏற்கேற்ப வேலைக்கேற்ற கூலி "பலன்" நீ பாடுபட்ட கடந்து மறைந்து விடும்!

அதாவது கொடுத்ததும் மறைந்து விடும்! வாங்கியதும் மறைந்து விடும்! அவைகளை "பெற்ற நீயும்" பிறந்து இறந்து! இறந்து பிறந்து! "மகாசிரமமும்" சஞ்சலத்துடன் அனுபவிக்க வேண்டும்!

குறிப்பு:- இங்கு உன் சுயமுயற்சி என யாம் குறிப்பிட்டது யாதெனில் நான், என்னால், எனது, என்ற அஹங்கார, அதிகார, அபிமானம் ஆகும். இவைகள் பிறவியின் "வித்து" ஆகும்!

மேலே சொன்ன அனைத்திற்கும் "கடும்" முயற்சி! பயிற்சி! கடும் உழைப்பு! மூட்டைகளை சுமப்பது போல் கடும் வேதனையின் உழைப்பு அவசியம் வேண்டும்! அதன் பலனோ? பெற்றதைப் போலும்! உன்னிடம் இருந்ததைப் போலும்



உ

(126)

உன் உறக்கம் முடிந்தவுடன், அவை இருந்து “மறைவதைப்” போலும்!
அதாவது கனவின் காட்சியைப்போலும் மறைந்து விடும், என ஸ்ரீ மஹான்கள் கூறுவர்!

“ஆனால்?”

தன்னை அறியும், அறிவாகிய இந்த ஆத்ம ஞானமானது, வருவதும் இல்லை! மறைவதும் இல்லை! கிடைப்பதும் இல்லை! தேடுவதும் இல்லை! நீ தேடி போவதும் இல்லை! தேடி வருவதும் இல்லை! கூடுவதுமில்லை! குறைவதுமில்லை! அது உன்னை அது எந்தவித விகாரமும், விவகாரமும் அற்றதாகும்!

“ஒருமுறை” அதை நீ, உணர்ந்து விட்டால் அது உன்னைவிடாது, என்பதும் உபசார வழக்கமே!
நீயே அதுவாக, இருக்கும் போது, வருவதேது? விலகுவதேது? ஒரு சிறு திரை மறைவேயாகும்! அத்திரை “மாயா” அல்ல! அது உன்னுடைய “மனத்திரை” யே ஆகும்! அத்திரை விலகில் நீ அதுவாகவே இருப்பாய்!

நான் என்றல் எனது என்னும், மூன்றே ஆகும்! இவை விட, எந்த வருத்தமோ, கஷ்டமோ, கடும் பயிற்சியோ, இல்லவே இல்லை! பிச்சுமூவின், ஆதலால் இம்மூன்றையும், விட்டு நீ இயல் மனதை நசுக்க, விரல் நோகவாம் ஒருபங்கு முயற்சி உன்னுடையது! ஒன்பது பங்கு கருணை எம்முடையது! இந்நிலையில் மனதை நசுக்கி விடலாம்! மனதை நசுக்கி விட்டு, சும்மாவே சுகமாக, இருக்கலாமே!



உ



பரசொரூபமாகிய, பரப்பிரம்மமே,
மூலசிவம் என்று, ஆதிசிவனாகவும் அதாவது;
சர்வ சதாவும், தன்நிலை மாறாத, "சதா
சிவமாகவும்"! மஹத்தான,
கோடானு கோடி, அண்ட ரண்ட பிரம்மாண்டங்களையும்
சிருஷ்டி பண்ணும், "மஹேசனாகவும்"!
சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், என்னும் முத்தொழில்
கர்த்தாக்களான, "ஹயன்"/"ஹரி"
"ஹரனாகவும்"! பிரணவ சொரூபியாகிய
"விநாயகனாகவும்"! ஞானப்பழமாகிய
"திருமுருகனாகவும்"! ஸத்தியத்
தையும், தர்மத்தையும், சீராக கடைப்பிடித்தவனாகிய,
"ராமச்சந்திரனாகவும்"!
கலியுக "தோஷ" நிவர்த்தி செய்பவனாகிய,
"கமலக் கண்ணனாகவும்"!
"வேத சம்ரக்ஷனார்த்த நிமித்தமாக, அனைத்து
தேவதெய்வங்களாகவும்"!
33 கோடி தேவர்கள்! 48 ஆயிரம் மஹாரிஷிகள்!



உ



கந்தர்வர், யக்ஷர், கின்னரர், கிம்புருஷர், ஸித்த, வித்யாதரர், "பூத தேவகணங்கள்"! மேலே கூறிய, இத்தனை வடிவங்களாக, "சூக்ஷ்ம நாமரூபங்கள்"! தரித்து, மற்றும் அனைத்து "தூல நாமரூபங்களையும்"! (மனம் படைத்த மனிதன்! மற்றும் நடப்பன, பறப்பன, நீந்துவன, ஊர்வன, கிருமி, கீடகம், மரம், செடி, கொடி, புல், பூண்டு, ஆகிய எல்லா, "உயிர்" இனங்களையும்) மாயாவினையும், மனதினையும், அவைகள் அசைவதைப் போல், நாம் அசைவித்துக் கொண்டு, ஓர் "பாவனையை" காட்டி, அந்த ஒன்றே, விளையாடிக் கொண்டிருக்கிறது, என்பதே ஸத்தியம். இதில் உங்கள், கவனம் எப்படி, இருக்க வேண்டுமென்றால்? பொன் இல்லாமல், நாம ரூப, ஆவரணம் இல்லை, என்றும்; ஆனால் அப் பொன்னில், நாமரூப ஆவரணம் இல்லை, என்ற நியதி; பொன்னே ஸத்தியம் என்றும். ஆவரண நாமரூபம், வந்து இருந்து, மாறுவது



உ

"மறைவது" இயல்பே என்றும்,
நாம ரூப, ஆவரணம், பழக்க வழக்கத்தில்
"குணதோஷம்" உடையது என்றும்,
அப்பழக்க வழக்க, குணதோஷமானது, ஜனனமரணத்தை
கொடுக்கும் என்றும். அந்த ஜனனமரணம் தேவையில்லை
என்றால், அவசியம் "நாமரூப குண" சம்பந்த
தோஷம், முழுமையாக அறிய வேண்டும், என்றும்,
அவை அறிவதற்கு, ஆவரண நாமரூபத்தை மறந்து,
"எல்லாம்வல்லனே" என்ற நிலை
பெறவேண்டும்! அதாவது? (சூட்சுமசொரூபம்)

① முன்பு கூறிய, வரிசைக் கிரமமான, தேவதெய்வங்கள்
"எல்லாமே" அனைத்து குண தோஷங்களும்,
அற்ற ஏக குண (சத்வ குண) சாட்சி பாவனையின்,
நம் உபாசனை மூர்த்தியே என்ற பாவனை உறுதியாக வேண்டும்.

② அடுத்து "எல்லாம்" ஏக குணமற்ற
"நிர்குண" அம்சமான, "சத்குரு"
சொரூபமே என்ற "பர" பாவனை உறுதியாக வேண்டும்!



உ

130

(3) அந்த நிர்க்குணபாவனையையும்,
விடுத்து, அதாவது "அகண்ட
பாவனை"யையும், நமக்குள்
ஆக்கிக் கொண்டு, எப்பாவனையையும் அற்ற
அதாவது, "தற்பதம்" அற்றதும்!
"தற்போதம்" உற்றதுமான!
"அகண்டான்ம" சொரூபமான!
நமக்கு ↑ அன்னியமில்லாத, நாம் நாமாய் ஆன, நாமே அதுவாய்! அதுவே நாமாய்! சும்மா சுகமாக இருக்கவாமே!

குறிப்பு:

தற் பதம்:- இது ஈசன் நிலை யென்ற, பரமாத்ம
சாட்சி நிலைக்கும், இது இன்னமும், சற்று உயரும் போது,
நிலையாகும்! சர்வசாட்சி நிலைக்கும்,
"இடைப்பட்ட சகஜான்ம"
நிலையாகும் எனஸ்ரீமஹான்கள் சொல்லுவர்!

தற் போதம்:- மேலே கூறிய சகஜான்ம நிலையையும்,
கடந்து சர்வசாட்சி நிலையில் உள்ள அகண்டான்ம
பாவனை ஆகும்! இப்பாவனையின் முடிவு,
"அகண்டாகாரம்" எனக் கூறலாம்;
பிரம்மானந்த சமுத்திரம் ஆகும்;
இது இருப்புத்தன்மை ஆகும்! பாவநிலை இது பாவனையல்ல!



(13)

"ஸித்தியை" காட்டலாம்!

"சக்தியை" காட்டலாம்!

இவ்விரண்டும் "மறைவிலை"

ஆனால் "தன்னைக்" காட்டுவது என்றால்? (ஆத்மாவையும் ஸ்ரீ பகவானையும் காட்டுவது என்றால், அதாவது) ஆகும்!

"இறந்தவனை" எப்படி காட்ட முடியும்?

"இறந்தவனே" அதாவது (மனம் இல்லாதவனையும், மனம் இறந்தவனையும்) ஓர் இறந்தவனே காண முடியும்! (நீயோ மனம் வசப்பட்டவன்)

ஓர் மொடாக் "குடிகாரனே" இவ்வாறு உணர்வான்! பேசுவான்! பக்தி என்ற (போதையில்) அறிவான்! இனம் தெரியாத பாஷையாக இருக்கும்! ஆனால்? உங்கள் அனைவரும் அறிவாகவும், நம் எண்ணமெல்லாம் "அப்பா" அருகிலேயே இருந்தும் அவராகவும் நம்மால் ஒன்றும் காண முடியவில்லையே என்றும், ஒன்றும் அறிய முடியவில்லையே என்றும் வியப்பாகவும், வேதனையாகவும் இருக்கும்! "உங்கள் ஸம் நிலையில்" நிலையில்! ஆனால்? தோன் அப்படி ஒன்றும் காணவில்லையே! தோணவில்லையே? காரணம் என்ன என கேட்கிறீர்கள்? "உங்கள்" அனைவரையும், நாம ரூபமாக காண முடியவில்லையே? என்செய்வோம்?

உ





யாம் உங்கள் அனைவரையும் பதுமைகளாகவே காண்கிறோம்

நீங்கள் அனைவரும் "இறந்தால்"!

எம்மை, உள்ளபடி, உண்மையாக காணவும்.

உங்கள், அஹங்காரம், அதிகாரம், அபிமானம்

"மானம்", "அவமானம்", "சூடு"

"சுரணை", "லஜ்ஜை"!

(நீங்கள் இறக்கும் நிலை யாவது? இறந்த நிலை) மேலே சொன்னவை இறந்தால் நீங்கள்

(வெட்கம், லஜ்ஜை போக வேண்டுமானால், கச்சையை கட்டு, என்பார்கள்!) ஆகிய உங்கள் மனத்திரையே, எம்மை உள்ளபடி, காணவொட்டாமல் மறைக்கிறது.

இவை அனைத்தும், கெட்டு நாசமானால், நீங்கள் அனைவரும், "இறந்ததே" ஆகும் என தன்னை அறிந்த, ஸ்ரீமஹான்கள் சொல்வதே கேள்வி!

முன்பக்கத்தில் கூறியபடி, மனோவலிமை, என்பது ↑ (எனது என்ற அபிமானத்தோடு கூடி) நான் செய்வேன்! நான் செய்து விட்டேன் என்றும், என்றால் தான் முடிந்தது! என்னால் தான் முடியும்! என்றும், அஹங்கார, அதிகார, ஆதிக்க

"வேகத்தினை" (ஓர் வெறியாட்டத்தினால்) மனதின் திறமையினால், மாயா மனதினால், மனக் கட்டுப்பாட்டினால், மனதின் ஸாகஸ முயற்சியினால், திரிகர்க்களைக் கொண்டும், மிஞ்சிய ஓர் "சக்தியை"





உ

பெறுவதே ஸித்திகளும், சக்தியும் ஆகும் என ஞானிகள் கூறுவர்!

“ஆஸ்???”

உபசார வசனமாக சொல்வது, “ஆத்ம சக்தி” எனச் சொல்வதுண்டு! ஆனால் ஆத்ம ஸித்தியும் இல்லை! சக்தியும் இல்லை! ஆத்மா நித்திய முக்தனே! ஆனால் “ஆத்மபலம்” என்னும் நிலையில், சொல்வது என்றால் மனம் அழிந்து, நாசமாகி, (மறைந்தாகி) அமைதியும் சாந்தியும் ஏற்படுவதே ஆத்மபலம், எனக் கூறலாம்! இந்நிலை பெற்ற, ஓர் திடஞானிக்கு “யோகமாயா” பக்கபலமாக இருக்குமேயன்றி, உபகார கர்த்தாவாக, இராது என்பதே ஸத்தியம்! இங்கு யோக மாயாவின் காரியம், தெரியும், உணரும், காணும் நிலையில் நடைபெறும். ஆனால் யோகமாயாவின் அக்காரியம், அனைத்தும், அத்திடஞானியால் “உபாய” மூர்த்தியே என அவன் ஒருவனே அறிவான், உணர்வான், காண்பான்! ஆனால் அது அவனை பாதிக்காது. அது பிரம்ம ரகஸ்யமாக, பாதுகாக்கப்படும்! மற்றும் எவரும் (மனம் படைத்தவர்) அறியார்.

எம்மை உள்ளபடி, காண வேண்டும் என்பதைவிட, எம்முள் கலந்து, கரைந்து, மயமாக சர்வார்ப்பணம் செய்யுங்கள்! அது உங்களால் முடியும். அந்நிலை பெற்று, யாமே நீங்களாய்! நீங்களே யாமாய்! அம்மா சுகமாக இருக்கலாமே!



உ

# "துறவு முயற்சி" என்பது?

மறை ① பக்குவம் இல்லாதவர்களாக இருந்தால் உங்கள் "உபாசனா" மூர்த்தியிடம், எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உன்னுடையதே என சர்வார்ப்பணம், செய்தால் உங்களுக்கு இருப்பும் இல்லை! இயக்கமும் இல்லை! உங்கள் பொறுப்பும் இல்லை! அந்நிலையில், உங்கள் அகங்காரம்! அதிகாரம்! அபிமானம்! முற்றிலும், நாசமாகி தன்மையிழந்து உங்கள், உபாசனா மூர்த்தியே, நீங்களாகவும், உங்களுடைய உபாசனா மூர்த்தியாகவும் இருப்பீர்கள். அந்த நிலையில், நீங்களே முன்பு இருந்த பிரம்மாத்ம பாவனை செய்தால், அதுவே நாம் நாமே அது என்ற ஜீவன் முக்தியை பெறமுடியும்!

② பக்குவம் உள்ளவர்களாக இருந்தால்:- "கலக்கம்/பயம்/சந்தேகம்" இல்லாமல், எல்லாம் ஒன்றே/என்ற அசைக்க முடியாத நம்பிக்கையால், இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! அதுவே நாம்! நாமே அது! என திட உணர்வோடு இருங்கள்! இவ்விரு நிலையும், ஜீவன் முக்தியே!

மறை பக்குவம்:- எந்நிலையிலும், குணதோஷங்கள், மனதை தாக்காத நிலையாகும்! இதுவே "துறவு முயற்சி" ஆகும்! இந்த நிலையால், பிரம்மானந்தத்தில் மூழ்கிய வண்ணம், சும்மாவே, சுகமாக இருக்கலாமே!



உ

135

ஓர் உண்மையான, பக்தனின் கேள்வியும்

எம் "சீரடி" சோனவாலு "பாபா"வின்,

பதிலும், அருகே மாக தருகிறேன். உணர்வால் உணர்ந்து, அது நாம் என ஆகுக!

(1)

கேள்வி:— ஹே பாபா! எத்தனை காலம், உன்னைத் தேடி, அலைந்தோம், என்றான்?

பதில்:— குழந்தாய்! இத்தனை காலமும், "உன்னுள்" தானே, இருந்தோம். என்றார்!!!

(2)

கேள்வி:— ஓ எம் தந்தையே! "நிம்மதியாக" வாழும் வழி என்ன? சொல்? சொல்? என்றான்?

பதில்:— எம் செல்வமே! "ஆசையின்றி" வாழ்ந்திடு மகனே! சுகம் பெறுவாய், என்றேன்!!!

(3)

கேள்வி:— எம் அப்பா! "ஆசை" இன்றி வாழ்வது எப்படி பாபா! என்றான்?

பதில்:— எம் மழலையே! உன்னைப் பெற்ற "அன்னையை கேள்"! சொல்வாள்! என்றேன்!!!

(4)

கேள்வி:— "நினைப்பது" எல்லாம் "கிடைப்பது" இல்லையே ஏன் பாபா! என்றான்?

பதில்:— செல்வமகனே! "கிடைப்பதை நீ நினைப்பதில்லை" மகனே என்றேன்!!!



உ (136)

ஓம் ஆத்மானந்த குழந்தைகளே!

இந்த 4 கேள்வியிலேயே, அனைத்தும் அடங்கியிருக்கிறது. சுருக்கமாக விளக்கம் தருகிறேன். உணர்வால் உணர்க!

(1) பதில்: "அது" பாசிநாட்ட கிடம் இல்லாம் சர்வ வியாபகமாக இருக்கிறது! (அது செயல்படாது! அவன் செயல்படுவான்) அதன் அம்சமான ஸ்ரீபகவான் "புறத்தில்" (வெளியில்) உன் காரியங்களின் நிமித்தமாக, தோன்றாத்துணையாக, இருக்கிறான். அதன் அம்சமான, ஸ்ரீபகவானே, உன்னுள் நீயாய் அவனை, உன்னுள் வைத்துக் கொண்டு "இதய வாசியாய்" ஆனந்தமாக இருந்து கொண்டு, உனக்கு ஆவன செய்கிறான்! ஆனால் "நீயோ" நாமரூப ஜகத், உறவு சுற்றம் நட்பு, பொன் பொருள் மோகம்! பெண்ணின்ப போகம்! இவைகளே, நம் வாழ்வின் வசதியாமென மயங்கி "உன்னுள் உள்ளவனை" மறந்து விட்டாய்! இது உன் மனதின் திரையே, தவிர "மாயையின்" திரை அல்ல!

என்றாவது எம் குழந்தை, எம்மை எண்ணித் தேடும் என்ற "நம்பிக்கையோடு" அவன் காத்திருக்கிறான்! நீயோ அவன் கொடுத்தவைகளை, நினைக்கிறாய்! ஆனால்?



உ

(137)

கொடுத்தவனை மறந்து விட்டாய்! இது
உன் "மனதின்" குற்றமேயன்றி,
"அவன்" குற்றமில்லை, யென்பதே
சத்தியம்!

(உ) பதில்:— "நிம்மதி" என்றுமே,
அவன் (ஸ்ரீபகவான்) மதியாகும்! ஆனால் அதை, உன் அஹங்கார
அதிகார, அபிமானத்தால், உன்னுடையதாக்கிக் கொண்டாய்!
உன்னுடையது என்றால்? மனம், புத்தி, சித்தம், அஹங்காரம்
என நான்காகும்! அவனுடையது என்றால்? "அறிவு"
என ஒன்றுமே! இந்த அறிவு, எதைப் பிரகாசிக்கும் என்றால்
எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உன்னுடையதே!
என்ற, "சர்வார்ப்பணத்தால்"
மட்டும் பிரகாசிக்கும்! இந்த சர்வார்ப்பணம் பிரகாசித்தால்,
"ஆசை" என்ற, சொந்த, பந்த, பற்று, பாசம், இல்லவே இல்லை!
" யாக பற்றப்படும் "பொருளும்" இல்லை!
" படக்கூடிய, ஜீவன் என்ற "நீயும்" இல்லவே இல்லை!
அவன் ஒருவனே இருப்பான்! அவனே நீயாவாய்! நீயே
அவனாவான்! இதைத்தான், ஓர் அன்பர், சொல்லும்போது,
ஆசை அறுமின்கள்! ஆசை அறுமின்கள்! அந்த
"ஈசனோடு" ஆயினும், ஆசை அறுமின்கள்! என்றார்.
இதன் பொருள்:— ஈசனையோ! அவன் பொருளையோ, விரும்பாதே!
நீயே ஈசனாகவும்! ஈசனே நீயாகவும் ஆவாயாக என்பது பொருள்படும்!
ஈசனைக் காணும் நிலை வேண்டாம்! ஈசன் ஆகும் நிலை வேண்டும்!



ஓ உ



பதில்:— ஆசையே துன்பத்திற்கு காரணம்! என்றும்; ஆசையே அவஸ்தை! என்றும்; ஆசையை விடவிட ஆனந்தமாமே! என்றும்; ஸ்ரீமஹான்களின் வாக்காக இருக்கிறது. ஆகவே ஆசை இல்லாமல், எப்படி வாழமுடியும்? என்ற கேள்விக்கு எம்பாபா நல்ல பதில் கொடுக்கிறார். அப்பதில்:— உன்னைப் பெற்ற "அன்னையக்கேள்" சொல்வார் என்றார்! குறிப்பாக "பிரசவ" வைராக்கியமும்! "மயான" வைராக்கியமும்! "நிலை" இல்லாது என்பார்கள்!

பிரசவ வேதனைப் படும் போது ஓர் "பெண்ணும்" பிணத்தை சுமந்து கொண்டு போகும் போது பின் செல்லும் "அனைவரும்" கொள்ளும் வைராக்கியம் நிலையில்லாதது!

(1) "க்ஷணப்" பொழுது இன்பம்; "கடம்" துன்பம் என்றும்!

(2) சொந்த பந்த பாசப் பிணைப்பு, கொண்டாடும் போது; இன்பம் என்றும்; அவைகள் மரணம் வரும் போது; திண்டாட்டமாகிய துன்பம் என்றும்; ஆகவே க்ஷணப் பொழுது "இன்பம்" சொல் வொன்றாக் பகவான் "துன்பமே" ஆகவே உன் ஆசையை, "நீ வேண்டும்" என்றும். பின் உன் அனுபவத்தினால் "நியாயம்" ஆகவேண்டும் என்றும் ஆசை வைப்பாயாக!



"உயிர்" உடலுக்கு "விதி" காலதேவன். அதற்கு உரியதைக் குறிப்பிட்ட காலத்தில், விதிசாச்சாரப்படி, பாரபக்ஷ தோஷமில்லாமல் "உன்னுடைய "முயற்சி" இல்லாமல் இயல்பாகவே, கொடுத்துக் கொண்டிருக்கிறான். "ஆனால்" "ஆசை (பேராசை)" வசம் அகப்பட்ட, "மனது" "முற் கவண சக்தி"யினால் கட்டுக்கெட்டு முள்செடியையே தின்று தின்று வாயெல்லாம் ரணமாகியும், ஆசையின் மோகம் ஒட்டகத்தை விடாத நிலைபோல். மனதின் வசம் அகப்பட்ட "மனிதன்" மட்டுமே, ஆசையால், மேலும் மேலும், அவஸ்தையுறுகிறான். விதிக்கப்பட்டது கிடைக்கிறது. எப்படி என்றால்? ஆசையின் உந்துதலால் மற்றொன்றை நாடுகிறான். அவனுக்கு இது விதிக்கில்லாததால் அது விலகிச் செல்கிறது. நம் "ஆசை" நிறைவேறாத தன்மையால், நாம் "நினைத்தது" நடக்கவில்லையே என்றும் நாம் "கேட்டது" கிடைக்கவில்லையே என்றும் மேலும் மேலும், பயம், கலக்கம், சந்தேகம், துக்கம், இவைகளையே பெருக்கிக் கொண்டு, மனஅவஸ்தைப்படுகிறான், மனிதன் மட்டும்.

உ

(140)



உன் வினையின் படி,

ஏது "கிடைக்கிறதோ"!
"நடக்கிறதோ"!!
"இருக்கிறதோ"!!!
உன்னிடம்

இது நம் வினையின்படி, நம் விதிகேவலல், அளந்தபடி கிடைத்திருக்கிறது என்றும், இதுவே நாம் விரும்பியது இதுவே நாம் கேட்டதாகும் என்றும் இவ்வாறு ஸ்ரீ பகவான் "கருணையில்" கிடைத்திருக்கிறது என்று "பூரண நிறைவுடன்" ஏற்றுக்கொண்டால் "ஆனந்தம்" தெரியாது! "துன்பம்" தெரியாது!

5 கேள்வி:- தேவாபா! ஒருநாள் போல ஒருநாள் இல்லையே, அது ஏன்? ஏன்? ஏன்? ஏன்? ஏன்? என்று?

பதில்:- ஓம் அன்பின் சேயே! உன் மனம், இன்னமும் "ஓர்நிலை" இல்லையே மகனே என்றேன்!!!

பொருள்:- முன் சொன்ன அனுபவ பாட நிலையில் நிலைக்கால் உன்னால் முடியும். அவ்வனுபவமாவது:- பொறுமை! அன்பு! கருணை! [illegible] ஈகை! இறை குரு உணர்வோ பிறர் குற்றங்களை பொறுத்தல், மன்னித்தல், விட்டுக்கொடுத்தல் இவைகளுடன், அதுவே நாம்! நாமே அது! என்ற நிறைவுடன் சும்மாவே சுகமாக இருக்கலாமே! (எந் நாளும் ஓரே நாள் ஆகுமே) (காலம் உனக்கு கவ்வு)



உ

பலகாலம், புழகிய பழக்க (வார்த்தையின் மாயாஜாலம்) வழக்க (செயல்களின் விகாரமும். அதனால் வந்த விவகாரமும்) த்திரைவ்: நாமமுமே ← "உலகம் வேறு" என்றும். "நாம் வேறு" என்றும்: "பிரம்மம் வேறு" என்றும்; எண்ணும் "பேத" புத்தியானது! அகண்டபர பாவனையான: "தத்பத" வாச்சியமான ஸ்ரீபகவானும்! "த்வம்பத" வாச்சியமான, மனோகவனத்துறைவிரல், பந்த ஜீவனான நாமும்! "அஸிபத" வாச்சியமான, பரசொரூப அம்சமான, "அதுவும்" த்வைதபாவனையில் இல்லவே இல்லையென்றும்; இம்மூன்றும் அத்வைதபாவனையாகிய, காலாதீத "பர" சொரூபமே! அதுவே நாம்! நாமே அது! என்ற "பிரம்மாண்ம" பாவனையால்தான் பேதபுத்தி அழிந்து. அதாவது மனோநாசமாகி. அதாவது மனம் மறைந்தாகி. "அதுவே நாமாகி" இருக்கமுடியுமே யன்றி. வேறு எந்த சாதனையாலும் நாம் அது ஆகமுடியாதென்பதே ஸத்தியம் என்று, ஸ்ரீ மஹான்களின் அனுபவமாகும்! இந்த பிரம்மாண்மபாவனையிற் விடா உணர்வோடு இருந்துகொண்டு. சந்தேக லேசமும் பயமின்றி சும்மாவே சுகமாக இருக்கலாமே!

குறிப்பு:- எந்த கர்மாவினாலும் ஆத்மஞானம் அடைய முடியாது! கர்மாவை விட்டாலன்றி ஆத்மஞானம் இல்லையாதென்பதே ஸத்தியம்!



அகம் பிரம்மம்! பிரம்மம் அகம்!
அகமே எல்லாம்! எல்லாம் அகமே!!
ஜகம், பரம், ஜீவர்கள்; சிறிதும் இல்லை!!!
என்ற, "பிரம்மாணம்" பாவனையானது,
எந்த ஒரு, "பக்குவ ஆன்மாவை" பற்றுகிறதோ,

அப்பக்குவ ஆன்மாவுக்கு, பலகாலம், உள்ளத்தில், வாஸனையால் பற்றியுள்ள, நாம் அஞ்ஞான ஜீவன்தானே! நாம் கடைத்தேற முடியுமா? நமக்கு ஸ்ரீபகவான் கருணையுடன், ஆத்ம ஞானம் சாத்தியமாகுமா? நமக்கும், சாதனை பண்ணும், திறமை உண்டா? நாம் பாபிகளுக்கெல்லாம் "மஹா" பாபியாயிற்றே, நமக்கும் நற்கதி உண்டா? "அது" நம்மை ஏற்றுக் கொள்ளுமா? நீ அதுதானே! வினை சம்பந்த பாப காரியம், உடலுக்குத்தானே! அவ்வுடலோ, அவ்வுடல் சம்பந்த உறவோ, பொருளோ, நானும் அல்ல, நம்முடையதும் அல்ல! அது ஓர் கருமேகம் போல், நம் ஆத்ம சூரியனை, மறைத்திருந்தது. ஸத்குருவின், கருணையின் காற்றானது, அம்மேகத்தை சிதற அடித்து, விரட்டிவிட்டதால், அங்கு, அது நாமாகவே இருக்கிறோம். என்ற அஞ்ஞானத்தால் தோன்றிய, "சந்தேக" பாவனையை நாசம் செய்யும்!

குற்றம் குறை, பேதம், விருப்பு வெறுப்பினால், தோன்றும், விசித்திர, விபரீத, விநோத, விகார, விரோத, குரோத, வஞ்சக, சூது, பொறாமை, போட்டி, முதலிய "வக்ர கோர குண தோஷம்" அனைத்தையும்,



(143)

"பெரிய" பஞ்சுப் பொதியில் விழுந்த;
"சிறிய" நெருப்புப் பொறியைப் போல,
பஸ்பமாக்கிய பின், ஸ்வயம் ஜோதியாய்
பிரகாசிக்கும்!

அந்த பிரம்மாண்ட பாவனையானது, சர்வ சதா "அலை" பாயும் மனதையும், அலையினால் அசையும் சமுத்திரத்தையும், காற்றினால் அசையும் தீபத்தையும், தடுத்து நிறுத்தி!

"அடக்கி" அழித்து விட்டு! "அசஞ்சல" மனதாயும்! "நிஸ்தரங்க" சமுத்திரமாயும்! (அலையற்ற சமுத்திரமாயும்) "நிவாத" தீபமாயும்! (அசைவற்ற நிச்சல தீபமாயும்) ஆக்கி, "தாம் தாமாய்" நிற்கும்!

"பசு! பதி! பாசம்!" என்ற, ஸ்ரீ ஈசன் நிலையை

"பதி"யாகிய, ஸ்ரீ பகவானே "பாசம்" என்ற திரையால், தம்மைத்தாமே மூடிக்கொண்டு, "பசு" நிலையாகிய "ஜீவன்" என ஆனார்! இப்போது, அப்பதியாகிய ஸ்ரீ பகவானே, பாசம் என்ற திரையை விலக்கி, பசு என்ற ஜீவத் தன்மையை களைந்து விட்டு "பதியாகவே" அதாவது, ஸ்ரீ பகவானாகத் பிரகாசிக்கிறார்.



உ

(1444)

என்பது போல், "பரம்" ஆகியயாம்!

ஓர் விளையாட்டின் நிமித்தம், சொந்த பந்த, பாசம், பிணைப்பாகிய, ஓர் "போர்வையால்" எம்மை யாமே மூடிக்கொண்டு "மனதால்" பற்றப் பட்டவனைப் போல், நடித்துக்கொண்டு "ஜீவன்" என ஆனேம்! விளையாட்டில் "போதும்" என்று, "நிறைவு" பெற்று, எம் விளையாட்டை யாமே, முடித்துக்கொண்டோம்! இப்போது பதி பந்தங்கள் நாசமானதால் "அது" ஆகவே இருக்கிறோம்!

லௌகீக நிலையில்:- வினையால், ஓர் தாவம் எடுத்து. அவ்வினையை ஒத்த, மற்றோர் வினைத்தாவத்தை, இணைத்து "பிணைந்து" கணவன், மனைவி, என்ற நிலையில், "இல்லற தர்மத்தால்" (இவ்வாக தர்மத்தால்) இணைந்து விளையாடினேம்! அவ்விளையாட்டில், போதும் என நிறைவு கொண்டோம்! எம் "நல்லற தர்மத் தால்" (பர கருணையால். அதாவது குருகருணையால்) அப்பதிபந்தங்கள் நாசமானதால் அதுவாகவே இருக்கிறோம்! என சும்மாவே, சுகமாகவே இருக்கிறோம்!



உ

(145)

இல்லற தர்மத்திற்கும், நல்லற தர்மத்திற்கும், சிறிது விளக்கம் தருகிறோம். உணர்க!

இல்லற தர்மம்:— இதுமறை நியமிப்பக்குவப்பட்டு, அதிகமானவர்களுக்குமட்டும், அவர்கள், இதைத் தாண்டிச் சென்று விட்டால் அது "முடிந்த" தர்மமானதால், "இல்லாத" தர்மமென்று, பேசப்படுகிறது! ஆரம்ப சாதனையாளர்களுக்கும், குடும்பி என்ற, ஸம்ஸாரிகளுக்கும், இது அவசியம், "சேவை"! இது "பதி" தர்மம் என்றும், "பாகவத" தர்மம் என்றும், "தான" தர்மம் என்றும், "தேவதைய" தர்மம் என்றும், நான்காகப் பிரிக்கலாம்!

(A) பதி தர்மம்:— கலியுக தர்ம நூலிலும், மற்றும் அனேகமடலிலும், "சதி, பதி"! மனைவி & கணவன்! எப்படி குடும்பத்துடன் இணைந்து வாழவேண்டும் என்பதாகும். இதில் குறிப்பாக, ஒருவரை ஒருவர், "அடக்கி" ஆளக்கூடாது என்பதே முக்கியம். ஒருவருள் ஒருவர் "அடங்கி" வாழவேண்டுமென்பதே "ஸக்யமாகும்!"

(B) பாகவத தர்மம்:— இதில் "மெய்" அன்பர்களை மட்டும் பஜனை, பூஜை, பாதசேவை, அன்னபானம் தந்து உபசரித்து, அவர்கள் "ஆசி" பெறுவதாகும்! குறிப்பு:— உறவு, சுற்றம், நட்பு, என்ற சொந்தபந்தபாச விருந்தோம்பல் அல்ல!



உ (146)

(C) தான தர்மம்:— பொன், பொருள், ஆடை, உணவு, நிலம், பசு, ஆகஇந்த ஆறும் ஒருவருக்கு தானம் செய்யும்போது, எப் பலனும் கருதாமலும், வியாபாரம், விளம்பரம், ஆடம்பரம் இல்லாமல், ஸ்ரீபகவானே! ஸ்ரீபகவான் பொருளை ஸ்ரீபகவானுக்குக் கொடுக்கிறேன் என்ற நிலையில் சர்வார்ப்பணம் "தர்மம்" செய்வதாகும்! "தானம்" செய்வதல்ல!

குறிப்பு:— பலன் கருதாது செய்வது தர்மம் ஆகும்!
பலன் கருதி செய்வது தானம் ஆகும்!

(D) தேவ தெய்வ தர்மம்:— ஆலயங்களுக்கும், தர்மஸ்தாபனங்களுக்கும், பொன் பொருள், உணவு, நிலம், வஸ்திரம், இவைகளை தர்மம் செய்யும்போது, அம் "மூர்த்தி"யையும் அவன் "நாமா"வையும், மூலதனமாகக் கொண்டு, எப் பலனும் கருதாமல், அம்மூர்த்தியே! அம்மூர்த்தியின் பொருளை அம்மூர்த்திக்கே கொடுக்கிறேன் என்று, நிஷ்காமியமாக செய்வதாகும்!

மேலே சொன்ன நான்கும் நான் என்றால் என்னுடையது "எனக்கு கொடுத்தால் அப்பலன்" மாறும். நிலையில் அதன் நிலைகண்டு "புண்ணிய பாப" அது உன்னையே சேரும்!

மேலே சொன்ன நான்கும் அதில் சொல்லிய நிலையில், நிஷ்காமியமாக செய்தால், புண்ணிய பாபம் அழிந்து, அது "தர்மமாக" மாறும்! அது ஜீவன் முக்திக்கு அஸ்திவாரமாக அமையும்!

மேலே சொன்னவைகளே பொதுதர்மமென்றும், தெய்வீக தர்மமென்றும் கூறப்படும்!



நல்லற தர்மம்:—

"பரநிலைக்கு" எந்த தர்மமும் இல்லை!

"நாமரூப, குணம், குறி" அற்ற நிலையில்! "கொடுப்பதும்! வாங்குவதும்!" எல்லாம் நீயே, என்றும், எல்லாம் உன்அருள்! என்றும், எல்லாம் உன்னுடையதே! என்றும், நடைபெறும் போது, "தெய்வீகமாக" மாறி! பின், தெய்வீகத்தையும் கடந்த, "பரநிலையில்" முடிவு பெற்று, அழிந்து விடும்! இதுவே நல்லற தர்மமாகும்!

இந்நிலையில், அனுபவ முதிர்ச்சியால், அதுவே நாமமாகி சும்மாவே அகமாக இருக்கலாமே!

"பக்தி" நிலையில்:— ஹயன், ஹரி, ஹரன்! ஆகிய இம்மூவர் நிலையில், உன் "உபாசனா" மூர்த்தி எவரோ (எந்த ஸ்வாமிகளோ! எந்த அம்பாளோ! அவைகள் ஸத்வகுணமாக, இருக்க வேண்டும்) அவர் உபாசனை என்றும், மற்றும் தீர்த்தம், மூர்த்தி, ஸ்தலம் என்ற, க்ஷேத்திராடனங்கள் என்றும், தபம் என்றும், ஜபம் என்றும், "ஆகம முறைப்படி அமைந்த "மண்டபமான" கோயில்கள் என்றும், "கல்யாண" தேவ தெய்வங்கள் என்றும், ஆசாரம், மடி, விதிமுறை, கட்டுப்பாடுகள் என்றும்,



உ

"உன் மனதை கவர்ந்த
ஸ்ரீ" அனேக, ஆச்சார அனுஷ்டானங்கள்
"ஸ்லாமே" உன் "மனத்
திரை" யென்றும்; உன் "மனத்" நடுப்புச் சுவர் என்றும்,
பிரமாணமாக, நம்பிக்கை உறுதியுடன், கருத்தில் வைப்பாயாக.

நீ உன்னில் போட்ட "மனத்" திரையை, நீதான் அகற்ற வேண்டும்.
" " " "மனத்" நடுப்புச் சுவரை, நீதான்,
"உடைத்தெறிந்து" அகற்ற வேண்டும்.
திரை என்றும்; சுவர் என்றும். யாம் சொல்வது, உன்
மனம், அறிவையே, ஆழமாகப் பதிந்ததையே, சுட்டிக்
காட்டுகிறோம்! இதன் உண்மை என்னவென்றால்?
மேலே கூறிய, அனைத்திற்கும், "நீயே ஆத்
மாவாக" இருக்கிறாய்! இதுவே பிரமாண உண்மை!
அதே போல், மேலே கூறிய அனைத்துமே, "உனக்கு
ஆத்மாவாக" இருக்கிறது! இதுவே சத்தியம்!
சித்த சுத்தியின் நிமித்தம், அவை அனைத்தும் நம்
ஸ்ரீ மஹான்களால், முறையாகக் கூறப்பட்டது!
சித்தம் சுத்தமானால், அவை அனைத்தும், தேவையில்லையெனவும்.
ஸ்ரீ மஹான்களால், சத்தியப் பிரமாணமாக, கூறப்படுகிறது!



உ

சித்தம் சுத்தமானால் :- மேலே கூறிய அசுத் திருமே, விபரீத கலக்க பயம் சந்தேகம் தோன்றாது.

சித்தம் சுத்தமாகவில்லையானால் :- மேலே கூறிய அனைத்திலும், "என்னை" ஆகுமோ? "ஏது" ஆகுமோ? என்ற நிலையில் நம் கஷ்ட நஷ்டத்திற்கு நம் "வினை"யும் "விதி"யும் தான், காரணமென்று உணராமல், நாம் அவைகளை, உதாசீனம் செய்தால் தான், இப்படி வந்தது என்று, உன் "மாயாமனம்" மிரட்டும்! உருட்டும்! பயம் காட்டி, சஞ்சலத்தை உண்டு பண்ணும்! இதுவே உன் அறியாமையின் "மனத்திரை" ஆகும்!

அங்கு நீ எந்த அபச்சாரமோ, அனாச்சாரமோ, அபவாதமோ, அபத்தமோ, பண்ணவில்லை, என்பதே சத்தியம்! அங்கு, இறை குரு உணர்வின் "திட உறுதி" வேண்டும்!

இத்திட உறுதி, எப்படி வரும் என்றால்?

(1) எல்லாம் ஒன்றே! (பகவானும் ஒருவனே! பரமும் ஒன்றே! எல்லாம், நாம ரூப குணக்குறி அற்ற நிலையில் ஒன்றே!)

(2) எல்லாம் நீயே! (இயக்க நிலையில், ஜகத் ஜீவ, ஈஸ்வராதிகளின், இயக்கம் அனைத்தும் ஒன்றே!)

(3) எல்லாம் உன்னுடையதே! (நான், என்றல், என்னுடையது, என்ற உடைமை உரிமையற்ற, எல்லாம் அவனுடையதே)

(4) அவனன்றி அணுவும் அசையாது! (அது இயக்கம் அற்றதால் இயக்குவோர், ஸ்ரீ பகவானின் அசைவே! அதாவது நாமரூப தோற்றம், இருப்பு, மாற்றம், மறைவு, எல்லாம் அக்காலாதீத ஒன்றே) என்ற நிலையில், திடமான உறுதி வேண்டும்!



மேலே கூறிய அனைத்தையுமே, எவ்வித

"சந்தேக. சங்கை. பயம்"!

இல்லாமல் "நம்பி" இருப்போம்.

இயக்கமும், சுத்தப் பொய் என்றும்,

ஆனால் அவை அனைத்தும், காவாக்கு அந்த ஒன்றுக்கு அன்னி யமில்லை! எப்படி யென்றால்?

பொன் இல்லாமல் ஆபரணம் இல்லை! ஆனால் பொன்னில் ஆபரணமில்லை!

மண் இல்லாமல் பாண்டம் இல்லை! ஆனால் மண்ணில் பாண்டமில்லை!

ஆகவே "பொன்னும்! மண்ணும்" பரம் என்றும்,

ஆபரணமும்! பாண்டமும்! "ஜக ஜீவ ஈஸ் வரர்களின்"! நாமரூபங்கள் என்றும்,

நாமே அதுவாக இருப்பதால், எம் விளையாட்டின் நிமித்தம், எமக்கு நாமே, நாமரூப ஜக ஜீவ, ஈஸ்வரர்களாகி, வடிவம் எம்மாயாவால் எடுத்து! எம் மனதால் விளையாடி! நாமே, எமக்கு போதும் என நிறைவு பெற்று, எம் விளையாட்டை முடித்து கொண்டு சும்மாவே சுகமாக, இருக்கிறோம்!

எம்முடைய அஞ்ஞானத்தால், அதாவது எம்முடைய அறியாமையால், அதாவது எம்முடைய கவனக் குறைவால், அதாவது "கவன ஹீனத்தால்" எம்முடைய, மாயா மனம், எம்மைப் பற்றியிது! ஜக வாஸ, பழக்க வழக்க, "தோஷத்தால்" பந்தி கிருதம் செய்த, மாம்ஸ பிண்ட, சொரூபங்கள். என அறியாமல்,



உ

151

இவ்வுலகமாந்தர், சொல்லும் ஓர் "பெண்" சரீரத்தை, எம் பாவ கர்மாவால் தொட்டோம்! இதுவே "மனைவி" எனச் சொன்னார்கள். "வினை, விதி" வசத்தால், சில கர்ம சம்பந்த, பாவங்கள் தோன்றின. அவைகளை, "குழந்தைகள்" எனச் சொன்னார்கள். வினை விதி வசத்தால், "ஆட்டம்" போட்டது! அதை ஓர் எம் பாவம், ஓர் தொழில் ஸ்தாபனம் என்றார்கள்! வினை விதி வசத்தால், காற்றில் சேரும், மண் குவியல் போல, ஓர் "மணமேடு" உண்டாகியது. அதை அனைவரும் "பணம்" என்று தெரிந்து பாடி மகிழ்ந்தனர்! "சந்தை" கூட்டமென கூடினர் (பணம் என்ற மணியின் காக.) "ஆடிப்பாடி" கொண்டாடினர்!

பூர்வ புண்ணியத்தாலும், ஸ்ரீ மஹான்களின் ஆசியாலும், கிடைத்த, "ஸ்ரீ சத்குரு" கருணையால், எம் அறியாமை நீங்கியது. "அறிவு" பிரகாசித்தது. அவ்வறிவே, "ஆத்மா"வாகவும் (செயல்படா ஒன்றாகவும்) அவ்வறிவே, "ஸ்ரீ பகவான்" (செயல்படும் ஒருவராகவும்) ஆகவும், பிரகாசித்தது! இவ்வறிவு பிரகாசிக்கும் முன், கண்டதே காட்சி என்றும், கொண்டதே கோலம் என்றும், உண்டதே இன்பம் என்றும், கூடிக் கும்மாளம் போட்ட, குடும்பம் எல்லாம், ஞானம் வந்தவுடன், பருந்தோடும் பறவைக் கூட்டம் போல பறந்து போயின! இதை எப்படி சொல்வது என்றால்? "வினை" விலகினமையால் "விதி" அவர்களை விரட்டி விட்டது என்றே சொல்லலாம்.



எம் அறிவின் பிரகாசத்தினால்,

"அவன் அருளால்"

"அவன் திருத் தாள் வணங்கும்"

ஸ்வயம்பு நிலையும், ஒன்றி உறவாடும் நிலையும்,

பெற்றோம்! வினை வாதி வசத்தால், இணைந்த நாலு சரீரங்

கள், ஒவ்வொன்றாக, விலகிக் கொண்டன! இதை

எப்படி சொல்வது என்றால்? "விழுந்த பச்சை கிளைகள், கொடி,

வேரு "நெருப்பில்" "பஸ்மம்" ஆயின!

கொம்புகள் போல, "எரிந்து"

அதாவது எம்மை, ஒட்டுவாரும் இல்லை! எட்டுவாரும் இல்லை!!

சீண்டுவாரும் இல்லை!!! நோண்டுவாரும் இல்லை!!!!

அதன் காரணம்:- "நான்/என்றல்/எனது"!

என்ற அஹங்காரமும், அதிகாரமும், அபிமானமும்!

மானவமானம், வெட்கம், சூடு, சுரணை, காய்ந்து போய்

"பட்ட மரம்" போலும், "குத்துக்கல்" போலும்,

ஸ்மரணை கெட்டு தன்மையிழந்து, அசைவு உணர்ச்சியற்ற

தன்மையினால், "நடைபிணம்" என ஆனோம்!

இந்நிலையில், ஸ்ரீமத் திருப் பரிபூரண கிருபையால் "அறிவு"

பிரகாசித்து, அதுவே "பேரறிவாக" மாறிவிட்டது.

இந்நிலையில் வினையும் இல்லை! வினைசம்பந்த விளையாட்டும்

இல்லை! விதியும் முடிவுற்றது போலும்!





உ

இந்நிலையில், மரம், செடி, கொடி, புல், பூண்டு
கள் அனைத்தும், "சத்திரம்" என ஆயின.
"மனம் படைத்த மனிதன் உட்பட, அனைத்து
ஜீவ" சரீரங்களும், அறிவால் காணும்
போது, பொம்மலாட்டம் ஆகவும்;
பேரறிவால் உணரும் போது, மணி பதுமைகளாகவும்;
எம் நிலையில், "யாம்யாமாக" ஸ்வயமாக,
இயல்பாக, சகஜமாக, "சாந்தி" யின் நிலையில்,
நாவாத்த, "பர" சொரூபமாக இருக்கிறோம்!
"வந்தோர், இருந்தோர், விளையாடியதோர், மாயா மனதின்
கற்பனையாகும்!" ஆனால்?
யாம் அன்றும், இன்றும், என்றும், என்றென்றும்,
"அது" வாகவே இருக்கிறோம்! அங்கு "நீங்கள்" அனைவரும்,
இருக்கிறீர்கள்! இதுவே சத்தியம் என,
சும்மாவே சுகமாகவே இருக்கிறோம்!
நடைபிணம்:— தாவசஞ்சாரத்திலும், இயக்கத்திலும்,
நடமாடும் ஓர் "பொம்மை!"
"பாக்கு" வருவதில் "பர" ஒலியின் ஸ்பீக்கர்!
"பரிவடிவம்" தருவதில், எமதண்ணைத் திருட
நகிய, "கண்மணியின்" பேறுவாகும்!
இதுவெங்காலும், பரமரகசியமாக பாதுகாக்கப்பட்டு வந்தது!



"சங்கல்பமே உலகம்!
"சங்கல்ப ரஹிதமே
மோக்ஷம்!" என்றனர், நம்
முன்னோர்களாகிய, அநுபவஞானிகள்!
இதை ஓர் அன்பர் பாடும் போது?
"இறப்பும் பிறப்பும் பொருந்த, எமக்கு"
"எவ்வண்ணம் வந்தது என, எண்ணி யாம் பார்க்கின்?
"மறப்பும் நினைப்புமாய்" வந்த
"மாயா மனதினால்" வந்தது தோழி!
எனச் சொல்கிறார். இதனால் என்ன உணர்கிறோம் என்றால்?
"மனம்" "எண்ணினால், ஜனனம்! என்றும்;
மறந்தால், மரணம்! என்றும்;"
தெளிவாகிறது. இதை அநுபவத்தில் உணர்வது என்றால்?
விழிப்பு நிலையில், காணும் பொருள், கனவில் இருப்பதில்லை!
கனவின் நிலையில், காணும் பொருள், நனவில் இருப்பதில்லை!
ஆனால்?
ஆழ்ந்த உறக்கத்தில், நனவின் பொருள்களும், கனவின்
பொருள்களும் இருப்பதில்லை! இங்கு நனவு கனவு ஆகிய
இவ்விரண்டிலும், இம்மாயா மனமே பங்கேற்கிறது!
அதாவது, இம்மாயா மனதினால், எண்ண "கற்பனை
வடிவில், கொடுக்கும் "நாமரூபங்களே!"
அவ்விரண்டிலும், மாறிமாறி வந்து, ஆட்டம் போடுகிறது!
ஆழ்ந்த உறக்கத்தில், இம்மாயாமனமானது, நம்மை...



உ

155

சைதன்யமான, "ஆன்மா"வுடன்,
லயமாகி நிற்கிறது. ஆன்மாவுடன்
கலந்து லயமாக வில்லை! ஆகவே திரும்பவும்,
நனவு கனவுக்கே, வந்து விடுகிறோம்!
ஆகவேதான், நம் ஸ்ரீமஹான்கள் "தூல" விருத்தி என்றும்,
"சாட்சி" விருத்தி என்றும், இருநிலைகளிலும்,
"மனோவிருத்தியினை" இவ்வுலகம்,
இருப்புடையதைப் போல், தோற்றுகிறதே யன்றி,
உண்மையில், இவ்வுலகம் இல்லவே இல்லை, என்பதே
சத்தியம்! இல்லாத உலகிற்கு, இருப்புடையது போல்,
தொடர்பு படுத்துவதாம், அம்மனமானது, வாக்காக செயல்
படும் போது, அஹங்காரம் அதிகாரம், அபிமானம்!
ஆகிய இம் மூன்றுமே, காரணமாக அமைகிறது, என்று
அனுபவ ஞானிகள் கூறுகின்றனர்!
ஆகவே தூல விருத்தியென்றும், "ஜீவ" நடையாகும்! என்றும்,
சாட்சி விருத்தி என்றும், "ஈச" நடையாகும் என்றும்! கொள்
ளலாம்! ஜீவன் என்ற, இன்பதுன்ப விருத்தியின் விளையாட்டும்,
ஈசன் என்ற கோலாகல விருத்தியின் விளையாட்டும், தூல
சூட்சும "பொம்மலாட்டங்களே"
இவ்வாரணம், "இருப்பும் இயக்கமும்!"
காலாதீத பரசொரூப, "ஆன்மாவை" அல்லாமல்,
வேறொன்றுமில்லை! ஆகவே, ஆன்மாவாகி தோன்றிய,
ஜகமோ, ஜீவனோ, ஈசனோ! நம் "மனதால"
எண்ணிடவல்லாது, இருப்பும் இல்லை! இயக்கமும் இல்லை!
இதுவே பிரமாண உண்மையாகும்!





உ

① "ஜகம்" எல்லாம் "மண்" என்றால் இயக்கம் அற்ற தன்மையினால் இருப்பும் இல்லா தொழியும்! பரமே ஆகிவிடும்!

② "ஜீவன்" எல்லாம் "மனமே"! ஆதல் "மாயா மனதால்" அசைவு நிலையில், இயக்கமும் கொண்ட அதன் இருப்பும் தோன்றுகிறது எனவுணர்ந்து நிலையில், அகங்காரம், அதிகாரம், அபிமானமும்! அற்ற நிலையில், "எல்லாம் நீயே" என ஆகி விட்டால், ஜீவன் அழியும்!

குறிப்பு:- எல்லாம் நீயே என்றால், இறை பரம் ஆகிய இரண்டிற்கும் பொருந்தும்!

③ "ஈசன்":- அதுவாக இருந்தவனே, அதுவாக வந்தான் (விளையாட்டின் காரணமாக) "மாயையை" வைத்து விளையாடினான். மாயாவோ அவன் நிழல் ஆகும்!

அவன் பரத்தோடு கரைந்து கலந்து விட்டால், அவனுடைய நிழலாகிய மாயாவும், இல்லா தொழியும்! அவனும் பரத்தோடு கலந்து விட்டால், ஈசன் நிலையும் அழியும்!

ஆகவே, இங்கு சொன்ன, மூன்றுமே, அதாவது, ஜக ஜீவ ஈசன்! ஆகிய மூவருமே, "மனம்" விருத்தியில் வந்த மயக்க சொரூபங்களே! இந்த மனமோ, அதன் விருத்தியோ, அதன் இருப்போ, அதன் இயக்கமோ, அதன் மூலமாகிய (விக்ராகிய ஆகும்) நான் என்றும் எனது/ என்ற குணதோஷங்களே! இம்மூன்றையும் நாசம் செய்தால், அதில் தோன்றிய, ஜக ஜீவ ஈசன், எல்லாம் தானே நம்முள் அடங்கி, ஒடுங்கி, மறைந்துவிடும்! அங்கு நாம் நாமாகவே இருப்போம் என்று, அமைதியாக சுகமாக இருக்கலாமே!



# ஆய ஜக ஐக்கியம்!
# ஆய மனோபேதம்!!

இவ்விரண்டின், விளக்கம் மிகமிக முக்கியம்.

(1) ஆய ஜக ஐக்கியம்:- இவ்வாக்கியத்திற்கு, ஸ்வய ஞானானுபவ பாடல் **59** பொருத்தமானதும், உணர்வுபூர்வமானதும் ஆகும்!

குற்றம் குறையாகவும், விருப்பு வெறுப்பாகவும், பேதா பேதமாகவும், புண்ணியபாவமாகவும், தப்பு தவறாகவும், நல்லது கெட்டதாகவும், இன்பதுன்பமாகவும், லாப நஷ்டமாகவும், சுகதுக்கமாகவும், இவைகளின் தொகுப்பு **ஆண், பெண்**! ஆக இருந்து **இரண்டுபட்ட** (துவைத நிலையில்) தன்மையில் இவைகளை **வாக்கால்** விமர்சித்து (பேசிப் பேசியே) **நாமரூப** ஜக ஜீவர்களுக்கு, குணதோஷங்களை உண்டுபண்ணி, இல்லாத உலகிற்கு இருப்பு கொடுக்கிறோம்!

(2) ஆயமனோ பேதம்:- மேலே கூறிய அனைத்தும், **மனோபேதமே** அல்லாது, **ஜகபேதம்** இல்லவே இல்லை, என்பதே ஸத்தியம்! எப்படியென்றால்? ஜகம் அனைத்தும்! ஜீவஸ்வரூபம் அனைத்தும்! **ஜடமே** உயிரற்ற, உணர்ச்சியற்ற, அறிவற்ற, **மண்**மயமேயன்றி வேறல்ல! என்பதே ஸத்தியம்!



உ



விளையாட வந்த இந்த மனமானது அனைத்தையும், விபரீத, விசித்திர, விளைவுகளாவ், **விரோத, குரோத** குணங்களை உண்டு பண்ணி, புண்ணிய பாபங்களைத் தோன்றச் செய்து, ஜனன மரணத்தை, உண்டு பண்ணிக் கொள்கிறது!

இதுவே **மனமய பேதமாகும்!**

இப்பேதாதி பேதங்களை ஒழித்து!

**அகில ஜக ஜீவ ஐக்கியத்தை**

அவசியம் பெற வேண்டும்!

அவசியம் பெற வேண்டும்!!

அதன் வழி முறை:- (A) எல்லாம் நீயே! எல்லாம் ஒன்றே! எல்லாம் நீயே! எல்லாம் ஒன்றே! எல்லாம் நீயே! எல்லாம் ஒன்றே என **ஸ்ரீ பகவானையும் பரசொரூபத்தையும்** (பொருந்தி! பொருந்தி! பொருந்தி!) ஐக்கியப்படுத்த வேண்டும்! இது பொருந்தி செய்வதாகும்!

(B) எதை கொடுத்தாலும், வாங்கினாலும்! எங்கு சென்றாலும் நடந்தாலும்! எதை பேசினாலும், கேட்டாலும்! இருந்தாலும் படுத்தாலும்! இமைகளை திறந்தாலும், மூடினாலும்! உண்டாலும், உறங்கினாலும்! **ஏக்** காரியங்களிலும், **கருவி கரணங்கள்** அதனதன் காரியத்தை, திட்டமிட்டபடி, ஒழுங்காக செய்கின்றன என்று,



கருதுகிறேன்; உண்மை சந்நியாசி!

இங்கு நான் அல்ல நீ! என்றல் அல்ல உன்றல்!

என்னுடையது அல்ல, உன்னுடையதே!

என்ற சாதனையை, சற்று சிரமத்துடன்! சற்று கடினத்துடன்! சற்று கடின முயற்சியுடன்! வெகு பிரயாசையுடன்! செய்தே ஆகவேண்டுமென்ற

தற் கவண சக்தியுடன்! வருந்தி வருந்தி செய்தால், சந்தேகத்தால்

வரும், கலக்கம், கவக்கம், பயதுக்கம், நாசமாகும்!
உடல் வருந்த வேண்டும்! மனம் வருந்த வேண்டும்!

உ கோடானு கோடி, அண்ட பிண்ட பிரம்மாண்டங்கள்! அனைத்தும், அனைத்திலும்! அந்த காலாதீத பரமே, நிறைந்திருக்கிறது என்றும்; காலாதீதபரமே, அனைத்துமாய் இருக்கிறது! அதற்கு அன்னியம் ஏதும் இல்லை என்றும்;

விரிவாக, விரிந்து, பரந்து, சர்வவியாபகமாக, உணர்ந்து, அதுவே யாமாய்! யாமே அதுவாய் மனோவேக மொழித்து! ஜகஜீவ சொரூபங்கள், தமக்குள் ஐக்கியப்படுத்தி தாம் தாமாய், அம்மாவே, அகமாக இருக்கவாமே!



உ

160

மாயா மன, கற்பனை சொரூபங்களான, மண்ணும் கல்லாலுமான ஆலயங்கள், மாடமாளிகைகள், கூட கோபுரங்கள், பாத்திர பாண்டங்கள், மரம், செடி, கொடி களிலான, உணவின் **பல பல** பக்ஷணங்கள், ஆடை அணிமணிகள், இப்படிப்பட்ட பற்பல **வஸ்துக்களும்! நம் மனதின்** தேவைகளும், ஆசைகளும் விரிந்ததால் ஆன சிருஷ்டிகள் அனைத்தும், **ஈச சிருஷ்டியான** பஞ்சபூதங்களாகும். இவை அனைத்தும் மன எண்ணத்தினால் விரிவடைந்தது. இவை அனைத்தையும், அது இன்னது, இது இன்னது என **கற்பனையால்** கொள்ள முடியாத, தள்ள முடியாத, சொல்ல முடியாத, அளவுக்கு விரிவடையும்! இவை அனைத்தையும், **மனதுக்கு** அந்நியமில்லை மனமே அனைத்தும்! அனைத்தும் மனமே! என ஓர்ந்திட்டால், எல்லாம் **ஒன்றாகிவிடும்!** இங்கு, மனமெய புசிப்புக்காக, தேவைகளும், ஆசைகளும் விரிவடைந்ததால் தோன்றியவையாவும், போகும் விளையாட்டு என்ற **நாடகங்கள்** மனமயமே கோடிக் முதலில் முடிவுறும்! பின் அனைத்து நாமரூபங்களும் முடிவுறும்! பின் அதனால் ஆன, எசாந்தபந்த பாசபற்று பிணைப்புகள் முடிவுறும்! நாமரூப பொருள்களோ! நாமரூப உறவு முறைகளோ! முடிவுற்றால், அவற்றால் பிணைக்கப்பட்ட, **நான் ஒரு ஜீவன்** என்ற ஜீவத்தன்மையும் நசுத்து நாசமாகும்!



உ



மனமைய பந்தத்தால் ஆன, ஜீவன் நாசமான
நாமே ஆத்மா! ஆத்மாவே நாம்! என்ற
அறிவு (ஸ்ரீபகவான் என்ற ஈச நிலை)
ஆகமுடியும்! ஆத்மாவே நாம் ஆனால், பின்
பேரறிவு நிலையான, பரமாத்ம நிலையும்,
முயற்சியும், பயிற்சியும், இல்லாமல் இயல்பாகவே
சாத்தியமாகும்! அந்த அகண்டபாவனையே ஓர் ஞானியின்
இருப்பிடமாகும்!
அந்த ஞானியின் இருப்பிடம், அகண்டபாவனை யாகவும்,
,, ,, ஸ்வய அனுபவம், அகண்டக ரூபமே சாக்ஷாத்காரமாகவும், அமையும்! அந்த
நிலையில், ஆத்மாவே, சுகமாகவே இருக்கலாமே!
சேத்தியமாய் செறிவுற்ற தோற்றம் எல்லாம்,
சாத்தியமாம், அகண்ட பர பாவனையால், நாசமாகி அங்கு
நாம் நாமாய், இருப்போம் என்றுன் எம் ஈசு!
அதாவது:- மனமூணால்
எடுத்து விட்டு, அவ்விரு மனசாயும்
தூர எறிந்து விட்டு, சும்மாவே சுகமாக இருஎன்கிறன்.
எம் ஈசு மஹாத்மா! எப்படி எனக்கேட்கிறீர்களா?
ஜக ஜீவ நாமரூப சொரூபங்கள் அனைத்தும்,
மாயா மனதால் தோன்றியவை ஆகும்!

உ



(இது உதாரணமே)

(நம் ஆன்மாவில் அம்முள், தைத்து விட்டது என்பது)

# உண்மையல்ல!

நம் ஆன்மாவில், அம்முள் தைத்து விட்டது.

அம்முள் தைத்த விதம்:— அறியாமை என்ற கவனக்குறைவால் நான் பந்த ஜீவன் என்ற **வெறும் எண்ணமே!** முள் தைத்த நிலை என்ற **பந்த ஜீவன்!**

அம்முள் உண்டான விதம்:— ஸ்ரீ பகவானின், மாயா சிருஷ்டியின், தோற்றமே **இயற்கையாக** எவ்வித உபாதையும் பண்ணாத, பண்ண முடியாத நிலையில் **விளையாட்டிற்காகவே** உண்டான முள் என, பொருள் கொள்ள வேண்டும்!

அம்முள் தைத்து புரையோடிய விதம்:— விளையாட்டின் பொருள் அறியாது விளையாட்டாகவும், தற்காலிகமாகவும், கருதாமல், விநயமாகவும், நிரந்தரமாகவும் கருதி நான், என்னால், எனது என்ற அஹங்கார, அதிகார, அபிமானமாக கொண்டதே அம்முள் உள்ளேயே **புரையோடியதாக** கூறும் நிலையாகும்.

இப்போது, ஸ்ரீ பகவானின் சிருஷ்டியாகிய, அதாவது இயற்கையாகிய, முள் தைத்து புரையோடிய, அம்முளை, எடுக்கும் விதம்:— நான், என்னால், எனது விடுத்து எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உனது! என்ற சர்வார்ப்பணத்தால், தைத்த முள்ளை எடுத்து விடலாம்!



# இதில் மாயாவால் உண்டான முனை ஒன்றுகும்!

# மாயா மனதால் உண்டான முனை ஒன்றுகும்!

மாயாவால் வந்த முனையானது, நாமரூப ஜக ஜீவ சரீர தோற்றங்களை, உண்டு பண்ணி, அழகு, கவர்ச்சி, வசீகரம் என ஆனது!

மாயாமனதால், தோன்றிய முனையானது, மாயாவால் தோன்றிய தோற்றத்தை, நான், என்றல், என்னுடையது, என **வெளியேற்று** அம்முனையால், தைக்கப்பட்டு.

எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உனக்கே! என்ற நிலையில், தைக்கும் முனையை, வெளியே எடுத்துவிட்டோம்.

பின் **இருப்பதொன்றே! நடப்பதுவு**

என்ற நிலையில்; எல்லாம் ஒன்றே என்றும் **மே!**

அது சிவமே! அது யாமே! என்றஎம் **ஸ்வய அனுபவத்தால்** அவ்விரு முனையும், **தாரளந்த** தன்மையினால், பிரம்மானந்த நிலையில், அம்மாவே, அகமாகவே இருக்கிறோம்!



(1) உ

ஸத் ஸித் ஆனந்தம் என்பதில்.

**ஸத்** :- இருப்பும், இயக்கமும், எந்த வெளிப்பாடும், அற்றதாகும். ஸத்யம் என்றுமே, ஸத் = உண்மை என்றும், யம் = இருக்கிறது என்றும். அதாவது, உண்மை, உண்மையாகவே இருக்கிறது என, ஸ்ரீமஹான்கள் சொல்வர். அதற்கு, வாக்கு வடிவிலோ, வரிவடிவிலோ, எவராலும், விளக்கம் கொடுக்க முடியாது.

**ஸித்** :- உண்மை உண்மையாகவே, இருக்கிறது என்ற நிலையில், அந்த உண்மையானது, தன்னைத் தானே, வெளிக்காட்டும் நிலையில், தான் தானே, **மற்றொன்றாய்** பிரகாசிக்கிறது. அதை வாக்கிய விளக்கமாக **ஸிதாகாயம்** என, ஸ்ரீமஹான்கள் சொல்லுவார்கள். அதாவது நிர்மல மான (குற்றம் குறை அற்றதான) (ஆணவம், கன்மம், மாயை அற்றதான) **ஆகாயத்தை** உபமானமாகக் கொள்ளலாம்.

இதை உற்றுணர்ந்து நோக்கில், அனைத்து கோள்களுக்கும், அனைத்து புவனங்களுக்கும், **ஆதாரம்** ஆகாயமாகும். ஆகாயத்திற்கு, ஆதாரம் எதுவும், எவையும் இல்லை என்பதே ஸத்யம். இந்த ஆகாயம், அனைத்திற்கும் ஆதாரமாக இருந்தாலும், நம்மை எந்நிலையிலும், தம் (உள்ளும் புறமுமாய் இருந்தாலும்)



உருவையும் இயக்கத்தையும் காட்டிக் கொள்வதில்லை. ஆகாயம் ஒன்று, ஸ்பைகபுரு வடிவத்தில், இருக்கிறது என, ஒருவருக்கொருவர் வாக்கை விளக்கமாக சொல்வாரேயே தவிர, அவ்வாகாயம் எதால் ஆனது? எப்படி இருக்கிறது? அது என்ன செய்யும்? அதை எப்படி உணரலாம்? என எவராலும், இதுகாலவரையிலும் சொன்னதும் இல்லை! கேட்டதும் இல்லை! ஆகாயத்தின் உண்மை என்னவென்றால்,

ஆகாயம் இல்லாமல், அனைத்து கோள்களுக்கும்; அனைத்து புவனங்களுக்கும்; மண், மலை, மரம், செடி கொடி, புல், பூண்டு, ஆகிய தாவர வர்க்கங்களுக்கும்; மனித இனத்தையும் சேர்த்து, 84 லட்சம் ஜீவகோடிகளுக்கும்!

நாமரூப இருப்பும் இல்லை! எந்த விதத்திலும் இயக்கமும் இல்லை என்றே சத்தியம் என, ஸ்ரீமஹான்களின், அனுபவ வாசகம் இருக்கிறது! இப்படி அனைத்திற்கும், ஆதாரமாயும்! ஆதரவாயும்! ஆகாரமாயும்! உள்ள ஆகாயமானது; இருப்பின் நிமித்தமாயும்; இயக்கத்தின் நிமித்தமாயும் தான் தானே சித்தம் (மனம் புத்தி சித்தம்) என ஆனது!



இந்த சித்திரமானது, நம் கற்பனையால், உருவாக்கப்பட்டதை, இருப்புடையது போல் காட்டவும்; அசைவின் நிலையில் அது இயங்குவதைப் போல், ஓர் மாயா ஜாலத்தை உண்டு பண்ணியது!

(3) ஆனந்தம்:— ஸித்தாகிய, சித்தத்தின் அசைவே ஆனந்தமாகும்! இதில் ஓர் உண்மை என்னவென்றால்? முன் கூறிய, ஸித்தே ஸிதாகாசம் என்றும், ஸித்பரம் என்றும், ஸின்மயம் என்றும், இன்னும் பல பல நாமாக்களினால், ஸ்ரீமஹான்கள் அழைப்பார்கள்!

ஸித்பர சொரூபமே ஸ்ரீபகவான் ஆகும்!

சித்தத்தின் சொரூபமே, நாமரூப ஜக ஜீவ தாவரங்கள் அனைத்தும் ஆகும்!

இவை அனைத்தையும், ஸித்பர ஸ்ரீபகவானாகவும், அவன் பொருளாகவும், அவன் இயக்கமாகவும், அவன் மயமாகவும், உணர்ந்தால் அது, ஆனந்தமயமாகும்.

மேலே கூறியபடி, அனைத்தையும், சித்தத்தின் கற்பனை வடிவ இருப்புடன் கூடிய, இயக்கமாகப் பார்த்தால், அது அற்புதமாகவும்; அதே புண்ணிய பாவமாகவும்



உ



ஆகவே ஆனந்தத்தை, ஆனந்தமாகவே
உணராமல், (மெய்வடிவ) இத்தத்தின்,
நாமரூபமாக கண்டால், அது ஸ்ரீபகவான்,
அன்பதுன்பமாக பிறவியின் விதித்த பொய்ப்பும் அல்ல! ஸ்ரீமஹான்களின், பொய்ப்பும் அல்ல! அது **மாயா மனதின்** பொய்ப்பே ஆகும்!

ஆகவே, மேலே கூறிய விளக்கத்தின்படி, நோக்கினால்?
ஸ்வய ஞானானுபவ பாடலின், **95ல்** உள்ளவாறு!

**சுத்த (ஸித்த) ஸிதாகாயமதாம்,** நிஷ்பிர பஞ்சம்.
(அச்ஸிதாகாய) சொரூபத்தில், பிரபஞ்சம் என்றுமே இல்லை
என்றார்! அதாவது, இதன் உண்மைப் பொருளாவது?

**சத்தில் ஸித்து உண்டு! ஆனால்**
**ஸித்தில் சத்து இல்லை** என்பதே ஸத்தியம்!

அதாவது **மண்** இல்லாமல் **பாண்டம்** இல்லை!
**மண்ணில்** " "!
" **பொன்** இல்லாமல் **பூஷணம்** "!
**பொன்னில்** (நகைப் பேரில்) "!

இதுவே நிதர்சன உண்மையாகும்! பரம் இல்லாமல், நாமுமே ஜகஜீவ தோற்றம் இல்லை! நாமுமே ஜகஜீவ, தோற்றங்கள், பரத்தில் இல்லை, என்பதே ஸத்தியம்!





அதன் அடுத்த வரிகளில்?

இத்துவைத பிரபஞ்சம் பரமார்த்தத்தில்

**இறையளவும்** இல்லை!

(ஆனாலும்) **விவஹாரத்தில்**

உண்டு என்றும்;

அடுத்த வரிகளில்?

**ஸத்தினுடைய** விவர்த்தமதாம், (மாயவடிவமான)

**சித்தம்தானே** செறிகின்ற (விளங்குகின்ற விளக்குகின்ற)

பிரபஞ்ச **நாமரூப**ங்களாக தோற்றும் என்றார்

இதன் உண்மையை, உணர்ந்தால்?

முன்சொன்ன பாடலின், அநுபவப் படி பார்த்தால்?

இங்கு, மூன்றாவது வரியில் சொல்லும் **பரமார்த்தம்**

எனச் சொல்வது **ஸ்ரீபகவான்** ஸ்தானத்தைக் குறிக்கிறது.

இத்துவைத பிரபஞ்சம், பரமார்த்தத்தில் இறையளவும்,

இல்லவே இல்லை யென்கிறார் ஆகவேதான்

**ஸ்ரீபகவான் ஸத்தியமே** (இல்லாமல், நாமரூப, ஜகஜீவ, பிரபஞ்சம் இல்லை என்றும்! பகவானில், நாமரூப ஜகஜீவ பிரபஞ்சம் இல்லை என்றும்!)

நாமரூப, ஜகஜீவ, பிரபஞ்சமானது பரத்திலும் இல்லை, பரமனிலும் இல்லை.



உ



ஆனாலும், இந்த நாம ரூப, ஜகஜீவ
சொரூபங்கள், தோற்றுகிறதே என்றால்?
பர அம்சமான ஸ்ரீபகவானின்
நிழலாகிய மாயாவின் மைந்தனான
மாயா மனதினால் தோன்றியது.
இருந்தது! அசைந்தது! இன்பதுன்பமும் தோன்றியது! பின் மறைந்தது!
அத்தோற்றமும் எப்படி இருக்கிறது என்றால்?
அஞ்ஞானம் என்ற! அதாவது, அறியாமை என்ற! அதாவது
தம் கவனக் குறைவால் நாமே ஆத்மா!
என்று உணர முடியாமல், நான் ஜீவன் என்றும்,
என்னால் முடிந்தது என்றும், எனது என்ற
மமதையான, உடமை, உரிமை, இவற்றுடன் அபிமானம்
கூடிய, அறியாமையின், மாந்தர் அனைவரும்,
உலகம் உண்டு! உலகம் உண்டு!! உலகம் உண்டு!!!
என்று, விஹார கோர குணங்களால், விவகாரம்
அடைந்து, பேசிப் பேசியே! பேசிப் பேசியே!
பேசிப் பேசியே! பேசிப் பேசியே! பேசிப் பேசியே!
இல்லாத உலகை, இருப்புடையதாக, செய்து கொண்
டார்கள். அவர்களுக்கு, எண்ணமே அவர்கள்
கற்பனையால், இவ்வுலகம் இருக்கலாம். ஆனால்
ஸ்ரீபகவான் கிருபையும்! பரஅம்ச ஸத்குரு ஆசியும்!
பெற்ற எமக்கு, உலகம் இல்லவே இல்லை! ஆகவே யாம்,
அதுவாகவே இருக்கிறோம், என்று சும்மா சுகமாக, இருக்கிறோம்.



உ



**குறிப்பு:—** ஆகாயத்தை, மூலப் பிரகிருதி என்றும், மூலமாயை என்றும், அவ்யக்தம் என்றும், **யோக மாயா** என்றும், ஸ்ரீமஹான்களார், சொல்லக் கேள்விப் படுகிறோம்!

**இதைப்போலவே:—** எம் ஸ்ரீரிபு மஹான், தன்பாடல்களில், **பரம்** என்பதை, **இரு** நிலைகளில் குறிப்பிடுவார். ஒன்று, தேவ தெய்வ நிலை! மற்றொன்று பரசொரூபநிலை!

(1) பரசொரூபத்தில், நாமரூப, பிரபஞ்சம் இல்லை என்பது உண்மை! பரசொரூபம் இல்லாமல், நாமரூப பிரபஞ்சம் இல்லை என்பதும் உண்மையே!

(2) அதைப்போலவே, பரசொரூபத்தில், **சூக்ஷ்ம நாமரூப, இறைவனும் (ஸ்ரீபகவானும்)** இல்லவே இல்லை என்பது ஸத்தியமே! பரசொரூபம் இல்லாமல், சூக்ஷ்ம நாமரூப, ஸ்ரீபகவானும், இல்லை யென்பதுவும் ஸத்தியமே!

ஸ்ரீபகவான் என்ற **ஈசன் நிலையானது வேதங்களால்தான்** இருப்பு தன்மை, கொடுக்கமுடியும்! கொடுக்கப்படுகிறது! ஆனால் இந்த வேதமே ஸ்ரீபகவானின் மூச்சுக்காற்று, எனவும் வரையறுத்து கூறப்படுகிறது! இதை எப்படி, உதாரணத்துடன் சொல்லலாம் என்றால்?

ஸ்ரீமஹான்களால்



உ



# தேவை இல்லாமல் ஆசை

# இல்லை! ஆசை ,, தேவை

இல்லை! என்பது, எப்படி முக்கியமோ, அதே
நிலையில், ஸ்ரீ பகவான் இல்லாமல், வேதம் வரவில்லை!
வேதம் இல்லாமல், ஸ்ரீ பகவானுக்கு இருப்பு இல்லை!

அப்பாடலில் முடிவில்?

எம் புத்திரா! அச்சித்தத்தை (யாம்) புகன்ற வண்ணம்,
**பூரணமாம்** பாவனையால் (உன்மனதை)
நாசம் செய்யான்றோர்!

அதாவது **பிரம்மாண்டபாவனையால்!**

அதாவது?
அகம் பிரம்மம்! பிரம்மம் அகம்! ஜெகம் பிரம்மம்!
பிரம்மம் ஜெகம்! அகமே எல்லாம்! எல்லாம் அகமே!
**ஜெகம், பரமும், ஜீவர்களும்**, ஒருவும் இல்லை
என, ஸ்வய அனுபவ நிலையில், உணர்ந்து, அந்த உணர்வு
பூர்வமாக, **சந்தேக, கலக்க, பயம்!** (களங்க)
இல்லாமல், அதுவே நாம்! நாமே அது! என்ற **ஸ்வய**
**அனுபவமாம்** பிரம்மானந்தத்தில், கலந்து,
கரைந்து, அதுவாகி, அம்மாவே, சுகமாக இருக்கலாமே?



உ

குறிப்பு:- **பக்தன்** இல்லையானால், **ஸ்ரீபகவானுக்கு** இருப்பும் இயக்கமும்! இல்லை, என்பதே ஸ்ரீமஹான்கள் கருத்தாகும்.

அதைப்போலவே, ஸ்ரீபகவான் இல்லையானால், ஓர்பக்தன் இல்லையென்றே சொல்லலாம்! காரணம்?

**ஸ்ரீபகவானே. பக்தன் ஆகிறான்**

என்பதே, ஸ்ரீமஹான்களின் கருத்தும் ஆகும்.

இதைப்போலவே:- **98** வது பாடலைக் கவனியுங்கள்.

**பரமசிவம்** (பரசொரூபமே, பக்தர்க்காகவும், ஞானத்திற்காகவும், ஸ்ரீபகவானாக இறங்கி வந்திருக்கிறது, என்பதே ஸத்தியம்! அந்த ஸ்ரீபகவான்)

**கருணை** (பொறுத்) இல்லாத, வெறும் மூடர்க்கு ??????

**சர்வமும்** பிரம்மம், என போதிக்காலும், சாஸ்திர

**வேதவேதாந்த** ↑ கருத்துக்களை,

கல்பகோடி காலம் சிரவணம் மனனம் பண்ணினாலும்,
(நிதித்யாசம் என்ற அநுபவம் ஏற்படாது) காரணம்?

**முன்** ஜன்ம; **இந்த** ஜன்ம, பழக்க வழக்க,

**பாஸனையால்** இருமை தான், தோன்றுமே யன்றி, ஒருமை தோன்றாது!



173

அதாவது, துவைதம் தான், தோன்று
மேயன்றி அத்வைதம் தோன்றாது!

ஆகவே **முமுக்ஷு** (சாதனையாளர்)
அனைவருமே, **ஸ்ரீபகவான் கருணையை**
பெற வேண்டும் என்று, வலியுறுத்தி சொல்கிறார்
எம்பெருமானார்!

காரணம் ???

அனைவருமே, இந்த மண்ணுலக, உலகத்தில், வினை
விதிவசத்தால் பிறந்து, உணவு, உடை, இருப்பிடம்
தேடும் வகையில்
ஆகியவைகளில், நான், என்றும், என்னுடையது, என
அஹங்கார, அதிகார, அபிமான **தோஷ**
குணங்களால், புசித்த தன்மையால், அவைகள்,
நீ, உன்னால், உனது, என, விட்டால்தான், அதனால்
வந்த, குணங்களும், அதைச் சார்ந்த மனமும்,
நாசமாகி ஒழியும். இத்தோஷகுணங்களும், அந்த
மனமும், அழிந்து, பாரம் அற்ற தன்மையினால், அதுவே
நாம்! நாமே அது! என்ற பிரம்மாண்ட பாவனையில், மனம்
நிலைத்து நிற்க முடியவில்லை! ஆகவே ஸ்ரீபகவானிடம்
அனைத்தையும், சர்வார்ப்பணமாக, விட்டுவிட்டு அவன்
கருணையால் மனம் மறுத்தால், தன்மையால், நாம்
அதுவாகவே, அம்மாவே அகமா இருக்கலாமே



உ



பாடல் 105ல் கூறுவதாவது:-

**உள்ளில் ஓர் உருவாய் உள்ளி** யன்றி, உலவுதரும் (அசைவைக் கொடுக்கின்ற, அதாவது, சஞ்சலத்தைக் கொடுக்கின்ற) காரண காரியம், எதுவுமே இல்லை! **உள்ளில் நீ** (நீயாக) **நிலைத்து** நிற்பதுவே, மோக்ஷம். **தன்னில் தான்** நிலைக்காமல், கடல் அலை போல், அசைவதுவே (சலிப்படைவதுவே) **பந்தம்** ஆகும் என்கிறார் ஸ்ரீரமண மஹாத்மா!

இதன் உண்மை, என்னவென்றால்? **நாமரூப** ஜக ஜீவ, சொரூபங்களாக, மனோமய கற்பனையை ஓட விட்டால், அதனால், குண தோஷங்கள், விரிவடையும்! அதனால் வினையும் ஜனன மரணமும், தொடரும்! அங்கு **அதுவே அவனாக** இருந்து, வினையும் புரிகிறது. என்றும், அதுவாகிய அவனே, நாமாக இருக்கிறோம், என்று உறுதி நிச்சயம், இயல்பாக அமைந்து விட்டால்,



உ



அதுவே மோட்சமும் ஆகும்! இதற்கு,

**போன** வற்றையும், **வருவன** வற்றையும்

**மனதை** அலையவிடாமல்; இருப்பது

ஒன்றே என்றும்; நடப்பது நலமே என்றும்;

எக்காலமும்! எந்நிலையிலும்! எப்போதும்! எவரிடத்தும்!

நாம் **அடங்கி** மற்றவரை **அடக்காமல்**

அசைவது, மாயாஜாலம் என்றும்; அசைப்பது மனம் என்றும்;

மாயாவும், மனமும், நானும் அல்ல! நம்முடையதும்

அல்ல! நாம் அந்த ஒன்றே! அந்த ஒன்றே நாம்! என

ஆனந்தமாக, சும்மாவே, சுகமாக இருக்கலாமே?

இதற்கு அனுபவமாக!

**106**ம் **107**ம், என்ன சொல்கிறது என்றால்?

**உன்னில் நீ** நிலைத்திருக்க வேண்டுமானால்?

உனக்கு, **அன்னியமாய்** காணும், தோன்றும்

எல்லாம் அதாவது அனைத்து ஜீவன்களும்; அனைத்து பொருள்களும்; தாவர வர்க்கங்களும், **மண்ணே!**

என்றும்; அனைத்தும் மண்ணுக்கு, அன்னியமில்லை என்றும்;

**அசையின்** நிலையில், கொடுத்ததை வாங்குகின்றன,

வாங்கியதை கொடுக்கின்றன; அவைகளை புண்ணிய பாவம் என

பேசப்படுகின்றன! ஆனால் அது உண்மை இல்லை! ஆனால்

இங்கு, தோற்றமும், அனைத்து தோற்றங்களும்; மண்ணே!





அந்த உ

மண்ணே, தாஸியாகவும், தாஸியே ஜீவ
அணுவாகவும், ஜீவ அணுவே ஆத்மாவாகவும்,
ஆத்மாவே பரமாத்மாவாகவும், பரமாத்
மாவே பர சொருபமாகவும், நான்
தானாக இருப்பதால், நான்
இங்கு காணும், பின்னம் பின்னமெல்லாம் மண் என்னமே
என்று, இட உணர்வோடு இருந்து கொண்டு, எந்த அசைவிலும்
கோர குண தோஷ விருத்தி இல்லாமல், எல்லாம் நலமே!
எல்லாம் நலமே! எல்லாம் நலமே! என சாந்தசமாதான
மாக இருக்கப் பழகினால், இந்த உத்தமமான
நிச்சயத்தினைப் படிப்படியாக, படிப்படியாக,
துவைத தோற்றங்கள் அனைத்தும் உனக்கு
மட்டும், ஒவ்வொன்றாக மறையும்! மறையும் என்றால்?
மண் பொம்மைகளாகவும், பொம்மலாட்டமாகவும், பின்
பின் உன் அனுபவத்தில், மண் மயமாகவும், உன்
ஸ்வய ஆத்ம ஒளியாகவும், அனைத்தும் நீயாகவும்,
நீயே அனைத்துமாகவும், உனக்கு அன்னியத்வம், எதுவும்
இல்லாத் தன்மை பெறுவாய், பிரம்மானந்த
மயமாக, நீ நீயாகவே பிரகாசிப்பாய்! இங்கு உனக்கு,
நாமரூ பேதம் முழுமையாக ஒழிய வேண்டும்! அப்படி ஒழியும்
போதுதான், உனக்கு எதுவும், அன்னியம் இல்லா நிலை பெற முடியும்
அந்நிலையை அடைந்தால் தான் நீ சும்மா, சுகமாக இருக்க நீ பாபா
நீயும் பெற முடியும்! அந்நிலை பெற, ஆசீர்வதி, வாழ்த்துகிறேன்!



உ



(A) எந்த கர்மாவினாலும், ஆத்ம ஞானம் பெற முடியாது!

(B) கர்மாவை, முழுமையாக விட்டாலன்றி, ஆத்மஞானம், பெற முடியாது!!

(C) கர்மாவின், சிறத்தை அற்றுப் போனாலன்றி, கர்மாவும் தொலையாது! ஆத்மஞானமும் கிடையாது!

(A) எந்த கர்மாவினாலும், ஆத்ம ஞானம் பெற முடியாது:—

கர்மாவே உலகம்! உலகமே கர்மா! பிரவர்த்தியே கர்மா! நிவர்த்தியே ஞானம்! எண்ணமே கர்மா! எண்ணமற்றிருப்பதே நிவர்த்தி! நாமரூபமே எண்ணம்! நாமரூபமில்லாமல், எல்லாம் ஒன்றே என, ஸ்வயமாய் இருப்பதுவே ஞானம்! நாமரூப கற்பனையே, குண தோஷம், குண தோஷமே, புண்ணியபாபம்! புண்ணியபாபமே, ஜனனமரணம்! இவை அனைத்தும், கர்மாவின் பிணைப்பு ஆகும்!

இக்கர்மாவின் பிணைப்பில் "எனது" என்ற, சொந்தமும், சொந்தத்தால் பந்தமும், பந்தத்தால் பாசமும், பாசத்தால் பற்று என்ற பிணையும், பிணையால் ஜனன மரணமும் உண்டாகிறது!

இதுவே **லௌக்க கர்மா** ஆகிறது!

ஓர் நாமரூபமான, ஸ்ரீபகவானை, கற்பனை சொரூபமாக, ஏற்றுக் கொண்டு, மேலே சொன்ன நியதியில், கர்மாவின் பலனை, இச்சை கொண்டு, பூஜை அபிஷேக ஆராதனைகள்! பலபல யாகங்கள்! பல பல தானதர்மங்கள்! தீர்த்தயாத்திரை ஸ்தலம், என்ற க்ஷேத்ராடனங்கள்! பக்தி பஜனை நாம சங்கீர்த்தனம்! ஆலயத் திருப்பணி! ஆஸ்ரம திருப்பணி! சாது சந்நியாச சமாராதனை! ஆஸ்ரம தர்ம அனுஷ்டானம்! வேதம் படித்தல்! வேதம் ஓதுதல்! வேத வேதாந்த பாடம், படித்தல், கேட்டல், போதித்தல்! இவை அனைத்தும்,

**தெய்வீக கர்மா** ஆகிறது!



உ

இந்த லௌகீக கர்மாவும்! தெய்வீக கர்மாவும்!
முறையே, இரும்பு **ஊசி** என்றும்,
**பொன் ஊசி** என்றும்,
(இவ்விரண்டும் கர்மாவின் பிணைப்பு என்றும்) ஸ்ரீமஹான்கள்
சொல்வார்கள்!

இவை இரண்டிலுமே, **நான், என்னுடைய,**
**எனது!** பற்றியாக இருப்பதால், இவை இரண்டுமே
**கர்மாவின்** பெருக்கமாகும்! இவையிரண்டுமே
**பிரவர்த்தியாக** இருப்பதால், இவைகளால்
ஆத்ம ஞானம் என்ற ஜீவன் முக்தி, பெற முடியாது என்பதே,
ஸ்ரீமஹான்களின் அனுபவமாகும்!

**புண்ணிய** பிறவியையும் (உயர்ந்த பிறவி) / **புனித** பிறவியையும் பெற முடியும். (தெய்வ பிறவி)

(B) கர்மாவை, முழுமையாக விட்டாலன்றி ஆத்மஞானம்
பெற முடியாது:- லௌகீகமோ! தெய்வீகமோ!
எதுவானாலும், **நான், என்னுடைய, எனது,**
என்ற, அஹங்கார, அதிகார, அபிமானங்களால்
பின்னிப் பிணைந்து இவைதால், இவை மூன்றையும்
விடாமல், **ஆத்மஞானம்** பெறவே பெற முடியாது,
நான், என்றல், எனது, ஆகிய இம்மூன்றும் கர்மாவின் பிரவர்த்தியாக இருப்பதாலும். அஹங்காரத்தால் **தன்னை** தனிமைப்படுத்தி
தன்னை ஒரு ஆத்ம சொரூபமாகவோ! ஸ்ரீபகவத் சொரூபமாகவோ,





உணராமலும், உணர முடியாமலும்,
அஹங்கார, அதிகார, ஆதிக்க வெறி
மதக்கி அபிமான சொரூபன்
என ஆக்கிக் கொண்டு, நாதனே,
கர்மாவை வலிய ஏற்றுக் கொண்டு,
பரசொரூபத்தையும், பரஅம்ஸ ஸ்ரீமகமாயியையும்,
மறந்து! கண்டதே காட்சி! கொண்டதே கோலம்!
உண்டதே இன்பம்! என மனோமயமாக
கர்மாவில், இனிமை (இன்பமும் அன்பமும்) போதையில்
இதுவே ஜனனமரண, காண்பதால், வித்தாகவும் இருப்பதால்,
கர்மாவை, முழுமையாக விட்டாலன்றி, ஆத்மஞானம் பெற முடியாது!
© கர்மாவில், சிரத்தை அற்றுப் போனாலன்றி,
கர்மாவும், உன்னை விட்டு தொலையாது! ஆத்மஞானம் கிடையாது!
கர்மாவின் சிரத்தையே, முன் கூறியபடியான்,
அஹங்கார, அதிகார, ஆதிக்க, வெறியும்
உடைமை, உரிமை, என்ற அபிமான போராட்
டமும் ஆகும் என, ஸ்ரீமஹான்கள் சொல்லுவார்கள்!
இப்படி வெறியாட்டமும், போராட்டமும், ஆடிஆடி,
ஓடி ஓடி, தேடி தேடி, நாய் போலும், பேய் போலும்,
அலைந்து தெளிவாய் போனதோ? இன்னமும் அலைய வேண்டுமா?
போதுமய்யா போதும்! பட்ட தெளிவாய் போதும்!!



உ



எத்தனை எத்தனை, கருக்குழியில் புகுந்து,
கிருமிகளால் கடியுண்டது போதாதா?
எத்தனை எத்தனை பேருக்கு, குழந்தையாக
பிறந்து இருந்து இறந்தது, போதாதா?
எத்தனை எத்தனை பேருக்கு, கணவனாக
இருந்து அதிகாரம் செலுத்தி, அழிந்த நாள் போதாதா?
எத்தனை எத்தனை பேருக்கு, ஆசை நாயகியாக இருந்து,
துன்பத்தையே, இன்பமாக, அனுபவம் கொடுத்து போதாதா?
எத்தனை எத்தனை, உறவு சுற்றம் எல்லாம் கொடுத்தும்,
வாங்கியும், கும்மாளம் அடித்தும், கொட்டமடித்தும்,
பின் சாடிக் கொண்டாடி, மாரடித்து அழுதும், போதாதா?
உறவினர் எல்லாம், மண் குழியில் மூடி மூடி, அலுத்து விட்டனர்,
" " அக்கினியில் மூட்டி மூட்டி, " "
மண்ணும் இவ்வுடலை, உண்டு உண்டு, அலுத்து விட்டது,
அக்கினியும் " , எரித்து எரித்து, அலுத்தும் போனான்,
பிரம்மதேவனும், கருவக்குள் படைத்து படைத்து, " " ,
உற்றார் உறவினரும், மாரடித்து அழுது அழுது, அலுத்து விட்டனர்,

**இன்னொரு கருவறை** வாசம், போதும்,
போதும், போதும், **போதுமையா!**
என மனம் உருகி, உள்ளம் நெகிழ்ந்து, ஏக்கத்தில்
கதறி, கண்ணீர் பெருகி, உள்ளம் உருகினால்,
**காமாக்ஷியின் சரணத்தை** சேரலாம்,



உ

எப்படி என கேட்கிறீர்களா?

முன்கூறிய, சர்வார்ப்பணத்தில்,

மனம் பரிபூரணமாகும் போது,

தேவையும், ஆசையும்,

அவசியம் குறையும், அவன் குறைத்து விடுவான்,

அங்கு பொறுமையே உனக்கு,

ஆவரணமாகவும், கவசமாகவும், அமைந்துவிடும்.

அத்தன்மையால், உன் தூலபிராரப்த கர்மா,

மட்டும் நடைபெறும், நடந்து முடிவுறும்.

நான், என்றல், எனது, முழுவதும், ஒழிந்து, நாசமான

தன்மையால் ஆகாமிய கர்மாதொடராது.

இயல்பாகவே கர்மா நடைபெறு-

வதால், கர்மாவில், மன அழுத்தம் தாமே

குறையும். அங்கு கர்மா நிகழ்வது, தோன்றியும்

தோன்றுமதும், கனவு காட்சி போல், நடைபெறும்.

அங்கு ஆக்கிரம், அவசரம், வேகம், படபடப்பு,

குறைந்து, குறைந்து, குறைந்து, நின்றுவிடும்.

அங்கு கர்மாவில், சித்தை இல்லாத தன்மையால்

இன்பமும் துன்பமும் தோன்றுமல், ஆனந்தம் ஒன்றே

நிறையும். அங்கு அதுவேறாம், நாமே அதுவென

நிலையில் சும்மாவே, சுகமாக இருக்கலாமே!



உ

உள்ளமாகிய மனமே அனைத்திற்கும், காரணமாக இருப்பதால், அந்த உள்ளம், **உருகலை** அது **உருத்தெரியாமல்** போகும்

அதாவது, மனம் என்ற நாமரூபத்தை இழந்து, மறைந்தாகி விடும், என்பது அனுபவ ஸ்ரீமஹான்களின், கருத்தாகும்! அதாவது **வறட்சி**யிலேயே உள்ளம், வலுப் பெறுகிறது. அவ்வறட்சி என்பது, இறை குரு **உணர்வு** இல்லாததே,

காரணம் ஆகிறது! நாமரூப, இன்பதுன்பங்களில், அச்சுவை இந்த உள்ளம், அதிகமாக சுவைப்பதால், அபிமானமாக, இருப்பதால், அஹங்கார, அதிகார, வறட்சியாகிறது! அதே உள்ளம் ஸ்ரீமஹா உள்ளம்

உணர்வோடு இருக்கும்போதும், எல்லாரும் நல்லவரே! எல்லாம் நலமே! என்ற, இறை குரு **பர உணர்வோடு** இருந்தால் அங்கே பொறுமை! அன்பு! கருணை! சாந்தி! அமைதி! நிலவுவதால், அங்கு உள்ளம், **கனிந்து! கரைந்து! உருகி!** உருத்தெரியாமல், மனம் என்ற நாமரூபத்தை இழந்து மறைந்தாகி விடுகிறதென, ஸ்ரீ அனுபவ ஞானிகள் கூறுவர்! மனம் உருகி, உருத்தெரியாமல், போனநிலையில்.



உ

நாமரூப, கோடானுகோடி, தோர்களோ!

" " " சூர்யசந்திரனோ!

" " " அண்டபிரம்மாண்டமோ!

" அனைத்து தாவர ஜங்கமங்களோ!

" " ஜீவ வர்க்கங்களோ!

" " **மனம்** படைத்த **மனித** இனங்களோ! க்ஷரம் அக்ஷரம் ஆகிய, அனைத்து **நாமரூப** பொருள்களோ! மேலே கூறிய, இவை அனைத்தையும், உண்டாக்கியதாக கூறும், **திரிகர்த்தாக்களும்**! கற்பனை உருவத்திலும், கற்பனை பெயரிலும்! வந்ததும் இல்லை! இருந்ததும் இல்லை! விளையாடியதும் இல்லை! மறைந்ததும் இல்லை! இவை அனைத்திற்கும், எந்த **நடப்பும்** இல்லை!!!

**ஆதலால்** மேலே கூறிய, இவை அனைத்தும், வந்தது என்றும், இன்னமும் இருக்கிறது என்றும், அவ்விளையாட்டு, நடைபெறுகிறது என்றும், **நாங்கள்** நிதரிசனமாகவே, கண்டு கொண்டோம், அனுபவித்துக் கொண்டோம், அதில் **பங்கேற்ற** நாங்களும் ஸத்தியமாக இன்னமும் இருக்கிறோமே என்றும், எங்களை யார் **இல்லை** எனச் சொல்ல முடியும், இல்லை எனச் சொன்னது???



184

உ

என்று மனம்படைத்த

மாந்தர்! மனவசப்பட்ட தன்மையினால்!

தம்முடைய அஞ்ஞானத்தால்! தம்முடைய

அறியாமையினால்! தம்முடைய கவனக்

குறையினால்! தம்முடைய மனத்திரைமூடிய

தன்மையினால்; அவ்வாறு கேட்கிறார்கள்!

அவர்கள் மறை நிஜக்கு அது பொருந்தும்!

அவர்கள் அறிவிலிகள் ஆசை? அவர்கள் புத்திசாலிகள்.

உள்ளம் உருகி, உருத் தெரியாமல் போன பக்த

ப அண்மா வுக்கு! கனிந்து, கரைந்து, உருகி,

பர உணர்வோடு, மயமாகும் உங்க

ளுக்கு, சொல்லும் நிஜயில் உண்மையல்ல! ஆனால்

உண்மை வாக்கிய விளக்கமாக மட்டுமே,

பரம் ஒன்றே ஸத்தியம்! மற்றும் அனைத்தும் அஸத்தியம்!

பிரம்மம் ஸத்தியம்! ஜகத் மித்தை என்ற ஸத்திய

வாக்கும்படி! கல்பில் நாம் வந்தது போல்,

மனமருட்சியால் ஓர் தோற்றமாத்திரமே யன்றி, உண்மையல்ல என்ற நிஜயில்

அன்பர்களுக்காக! இருப்பது ஒன்றே! நடப்பது நவமே! அதன்

நிஜயில், எல்லாம் ஒன்றே!

அதுவெமே! அதுயாமே!

அதுநீங்களே! என அம்மாவே சுகமாகவே இருக்கிறேன்! இது ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்!

பாபா




Abode of Love

You Are Everything!